வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 03 27.08.2022 சனிக்கிழமை இதழ் : 263 பக்கங்கள் : 16

# இலங்கையை சில நாடுகள் கொடுமைப்படுத்துகின்றன!

## இப்படி சாடுகிறார் சீனத் தூதுவர்!



**கொழும்பு, ஓகஸ்ட் 27**

**சில நாடுகள் தொலைவில் அல்லது அருகில் இருந்து இலங்கையை கொடுமைப்படுத்துகின்றன. இலங்கையின் இறையாண்மை, சுதந்திரத்தை மீண்டும் மீண்டும் காலில் போட்டு மிதிக்க பல்வேறு ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை எப்போதும் சுமத்துகின்றன.**

**- இப்படி சாடியிருக்கிறார் இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங்.** 15

## மோட்டார் சைக்கிளிலிருந்து தவறிவீழ்ந்து கர்ப்பவதி பலி!

### காரைநகரில் நேற்று துயரம்

யாழ்ப்பாணம், ஓக. 27

மருத்துவ பரிசோதனைக்காக கணவருடன் மோட்டார் சைக்கிளில் சென்ற கர்ப்பவதி பெண் ஒருவர் தவறிவீழ்ந்து உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை காலை பொன்னாலை பாலத்துக்கு அண்மையாக இடம்பெற்றது. இதில், காரைநகர் சிவகாமி அம்மன் கோயிலடியை சேர்ந்த ஜெயந்தன் தேவப்பிரியா (வயது -23) என்பவரே உயிரிழந்தார். 15

### கட்டுவன் - மயிலிட்டி வீதியில்

## மூடப்பட்டிருந்த பகுதியை விடுவித்தார் படை தளபதி!

யாழ்ப்பாணம், ஓக. 27

கட்டுவன் - மயிலிட்டி வீதியில் இராணுவத்தினரால் மூடப்பட்டிருந்த 480 மீற்றர் நீளமான வீதியை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லித்தும் லியனகே மக்கள் பாவனைக்காக திறந்து வைத்தார்.

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லித்தும் லியனகே நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்றிருந்தார். இதன்போதே, சர்ச்சையை ஏற்படுத்திய வீதியும் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டது.

போர் காலத்தில் வலி. வடக்கு 15

## சந்நிதியானுக்கு இன்று கொடி!

வடமராட்சி, ஓக. 27

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை 2.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

பெருந்திருவிழாவில் காலை 15

## மேலும் 25 மில்லியன் டொலர் யுனிசெவ் அமைப்பு வழங்கும்!

கொழும்பு, ஓக. 27

கல்வி உட்பட மாணவர்களுக்கு தேவையான வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல், கர்பவதி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மாருக்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க இலங்கைக்கு மேலதிகமாக 25 மில்லியன் டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என்று யுனிசெவ் அமைப்பின் தெற்காசியாவிற்கான பிராந்திய பணிப்பாளர் ஜோர்ஜ் லாயா அஜே தெரிவித்துள்ளார்.

தெற்காசியாவுக்கான பிராந்திய பணிப்பாளர் ஜோர்ஜ் லாயா அஜே தலைமையிலான யுனிசெவ் அமைப்பின் சிரேஷ்ட பிரதிநிதிகள் குழுவுக்கும் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கும் இடையில் இடம்பெற்ற சந் 15

## வடமராட்சியில் நேற்று 3 வாடிகளுக்கு தீ வைப்பு!

வடமராட்சி, ஓக. 27

வடமராட்சி கிழக்கில் நேற்றிரவு மூன்று வாடிகள் தீயில் எரிந்து நாசமாகின. இதில், பல இலட்சம் ரூபாய் பெறுமதியான மீன்பிடி வலைகள் அழிவடைந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

வாடிகள் தீயில் எரிவதை கண்ட மீனவர்கள் அதை அணைக்க முனைந்தபோதும் அந்த முயற்சி பலனளிக்கவில்லை. இதனால், வாடிகள் முற்றாக தீக்கு இரையாகின.

எரிந்த வாடிகளில் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான வலைகள் இருந்தன என்றும் இவை பல சிறு தொழிலாளர்களுக்கு சொந்த 15

## ஐ. எம். எவ் பிரதிநிதிகளுடன் நேற்றும் பேச்சு நடந்தது!

கொழும்பு, ஓக. 27

நாட்டில் தற்போது நிலவும் நிதி நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையில் மற்றுமொரு சுற்றுப் பேச்சு நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது.

ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மெய்நிகர் வழியில் பங்கேற்றார்.

இதன்போது, மின் கட்டணத் திருத்தம் மற்றும் 15

## வார இறுதி நாட்களிலும் தொடருகிறது மின்வெட்டு

கொழும்பு, ஓக. 27

நாட்டில் இன்றும் நாளையும் மூன்று மணித்தியாலங்கள் மின் துண்டிப்பு அமுலாக்கப்படவுள்ளதாக இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபை முன் வைத்த கோரிக் 15



## ரஞ்சன் நேற்று விடுதலை; புதிய பதவியும் கிடைத்தது!!

கொழும்பு, ஓக. 27

நீதிமன்ற அவமதிப்பு குற்றத்துக்காக தண்டனை அனுபவித்த நடிகரும் அரசியல்வாதியுமான ரஞ்சன் ராமநாயக்க நேற்று விடுதலை செய்யப்பட்டார். அத்துடன், அவருக்கு நல்லெண்ணத் தூதுவர் பதவியும் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலத்தில் நீதித் துறையை விமர்சிக்கும் வகையில் எந்தவொரு கருத்தையும் தெரிவிக் 15

## எரிபொருள் உரிமை தனியாருக்கு எதிர்த்து உயர்நீதிமன்றில் வழக்கு!

கொழும்பு, ஓக. 27

எரிபொருட்களை இறக்குமதி செய்வதற்கும் நீண்டகால அடிப்படையில் விற்பனை செய்வதற்கும் தெரிவு செய்யப்பட்ட வெளிநாட்டு எண்ணெய் நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தை சவாலுக்கு உட்படுத்தி நேற்று வெள்ளிக்கிழமை உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை அரச முற்போக்கு ஊழியர் சங்கத்தால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பிரதமர், எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர, அமைச்சரவை உறுப்பினர்கள், இலங்கை 15

## விவசாயி ஒருவருக்கு 50 கிலோ உரம் இலவசம்!

### விவசாய அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஓக. 27

விவசாயி ஒருவருக்கு 50 கிலோ எடை கொண்ட யூரியா உரம் இலவசமாக வழங்கப்படவுள்ளது என்று விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

உலக உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத்தால் வழங்கவுள்ள ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா உரம் இரு வாரங்களில் கிடைக்கவுள்ளது. இந்த உரம், நாட்டிலுள்ள குறைந்த வருமானம் பெறும் விவசாயக் குடும்பங்களுக்கு நெல் பயிர் செய்கைக்காக வழங்கப் படும்.

இதன்படி ஓர் ஏக்கருக்கும் குறைவான நெல் வயல்களை வைத்திருக்கும் 3 இலட்சத்து 75 ஆயிரம் விவசாயிகளுக்கு இந்த உரம் வழங்கப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## இப்படியும் நடக்கிறது...!

ஐ. நா. மனித உரிமைகள் பேரவைக்கு இலங்கையிலிருந்து முதன்முதலில் சென்று கதவைத் தட்டியவர் யார் என்பதை அறிந்தால் நீங்கள் எல்லாம் ஆச்சரியப்படுவீர்கள்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின்போது ஜே. வி. பி. என்ற மக்கள் விடுதலை முன்னணி, ஆயுதப் போராட்டம் ஒன்றின் மூலம் ஆட்சியைப் பிடிக்க முயன்றது உங்களில் பலருக்கு நினைவிருக்கலாம்.

அந்த ஜே. வி. பியின் ஆயுதக் கிளர்ச்சியை அடக்குவதற்காக அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தனது படைகளை களத்தில் இறக்கியது.

சிங்கள இளைஞர்களை படைகள் அப்போது வேட்டையாடின. பல ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர்.

அப்போது எதிர்க்கட்சியான சிறீ லங்கா சுதந்திரக் கட்சியிலிருந்த இளம் பாராளுமன்ற உறுப்பினரான மகிந்த ராஜபக்ஷ, அரசின் இந்த காட்டுமிராண்டித்தனமான படுகொலைகளுக்கு நீதிகேட்டு ஐ. நா. கதவுகளைத் தட்டினார்.

அப்போது பலரும் அறிந்த மனித உரிமைவாதியாக இருந்த மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு ஐ. நாவில் இலங்கைக்கு எதிராகப் புகார் கூறியபோது அவரை அப்போதைய ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தேசத்துரோகி என்று வர்ணித்தது.

பின்னாளில் அதே மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருந்தபோது, விடுதலைப் புலிகளின் போராட்டத்தை அடக்குவதற்காக நடத்திய போரில், அப்பாவித் தமிழ் மக்களே கொல்லப்படவில்லை என்று அவர் வாதிட்டு வருகின்றார்.

அவரைப் பொறுத்தவரை முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்டவர்கள் எல்லோருமே விடுதலைப் புலிகள்தான்.

ஆனால், அந்த மனிதப் பேரவலத்துக்கு எதிராகக் கடந்த பதின்மூன்று ஆண்டுகளாக தமிழ் மக்கள் ஐ. நா. வாசலில் காத்திருக்கின்றனர். வருடத்தில் இரண்டு தடவைகள் ஜெனிவாவில் நடைபெறும் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகளின்போதும் தமிழ் மக்கள் ஜெனிவாவில் கூடுவதைக் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக தொடர்ச்சியாக செய்து வருகின்றனர். அதிலும், புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் தொடர்ச்சியாக பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

பேரணிகள் நடத்துவது, பிரிட்டனிலிருந்து சைக்களில் பவனியாக செல்வது, ஐ. நா. வாசலில் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் செய்வது என்று தொடர்ச்சியாக தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர். அப்போதெல்லாம் இவற்றை கண்டும் காணாமலும் இருப்பதோடு, சிலவேளைகளில் ஆங்காங்கே சிங்கள மக்கள் அரசுக்கு ஆதரவாகவும் தமிழர்களின் போராட்டத்துக்கு எதிராகவும் சிறிய சிறிய அளவிலாவது தாங்கள் வாழ்கின்ற நாடுகளில் கண்டனங்களை தெரிவிக்கவும் தவறுவதில்லை.

தமிழ் மக்கள் வீதியில் நின்றபோது அதனைப் பார்த்து ரசித்துக்கொண்டும் கேலிசெய்துகொண்டும் இருந்த புலம்பெயர்ந்த சிங்கள சகோதரர்கள் அப்போது தமது அரசுக்கு ஆதரவாகவும் படையினருக்கு ஆதரவாகவும் வாதிட்டுவந்தனர்.

இப்போது நிலைமை தலைகீழாகியிருக்கின்றது. எந்த அரசுக்கு ஆதரவாகவும் படையினருக்கு ஆதரவாகவும் குரல் கொடுத்து வந்தார்களோ அவர்கள் இப்போது அதே தரப்புக்கு எதிராக வீதியில் இறங்கியிருக்கின்றனர்.

ஜெனிவாவிலுள்ள ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் வாசல்கதவுகளை அவர்களும் இப்போது நீதி கேட்டு தட்டத் தொடங்கியிருக்கின்றனர்.

நாளை ஞாயிற்றுக்கிழமை சிங்கள புலம்பெயர்ந்தோர் ஏற்பாடு செய்திருக்கும் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று ஜெனிவாவில் நடைபெறவிருக்கின்றது. அதற்கான பிரசாரங்கள் புலம்பெயர் நாடுகள் எங்கும் முழுவீச்சில் முன்னெடுக்கப்படுகின்றன.

இப்போது எந்தப் படையினர் மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபடவில்லை என்று வாதிட்டு வந்தார்களோ அதே படையினருக்கு எதிராக புகார் பட்டியலை வாசிக்கத் தொடங்கியிருக்கின்றனர்.

இது தொடர்பான விளம்பர அறிவித்தல் ஒன்று சமூக வலைத்தளங்களில் பரவலாக பகிரப்பட்டதைக் கண்ட புலம்பெயர் தமிழ் ஒருவர், அதில் இருந்த ஏற்பாட்டாளரின் தொலைபேசிக்கு அழைப்பு எடுத்து அந்தப் போராட்டத்தில் உள்ள நியாயங்களை சொன்னாராம்.

அப்படிச் சொன்ன அந்த புலம்பெயர் தமிழர், “நாங்களும் கொஞ்சப் பேரைக் கூட்டிக்கொண்டு போராட்டத்தில் கலந்துகொள்கின்றோம்”, என்று கூறியபோது, “இல்லை நீங்கள் வரவேண்டாம், நீங்கள் வந்தால் பிறகு புலம்பெயர் புலிகளுடன் சேர்ந்து அரசாங்கத்தை கவிழ்க்க சதி செய்வதாக இலங்கையில் சிலர் பிரசாரத்தை தொடங்கிவிடுவார்கள்”, என்றாராம் அவர்.

இந்தத் தகவலை பகிர்ந்துகொண்ட சுவிஸ் நண்பர் ஒருவர், “இந்த இலட்சணத்தில்தான் அங்கே தமிழர்களின் நியாயமான போராட்டங்களை சிங்களவர்கள் இப்போது ஏற்றுக்கொள்ளத் தொடங்கிவிட்டார்கள் என்று கூறிக்கொண்டிருகிறீர்கள்”, என்று என்னுடன் சினந்துகொண்டார்.

- ஊர்க்குருவி.

# திருவிழாவில் கைகலப்பு; ஒருவர் பலி! இருவர் காயம்!!

மட்டக்களப்பு, ஓக. 27

கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வாகனேரி பிரதேசத்தில் ஆலய திருவிழாவில் இடம்பெற்ற வாய்த்தர்க்கம் காரணமாக இளைஞர் ஒருவர் மரணமடைந்துள்ளதுடன், இருவர் காயமடைந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி கருணாரத்ன தெரிவித்தார்.

வாகனேரி திரௌபதி அம்மன் ஆலயத்தில் உற்சவம் இடம்பெற்று வந்த நிலையில் ஆலயத்தில் சிலருக்கிடையில் நடைபெற்ற வாய்த்தர்க்கம் காரணமாக கலவரம் ஏற் பட்டது.

இந்த நிலையில் வாகனேரி குளத்துமடு முருகன் ஆலய வீதியைச் சேர்ந்த நடராஜா ரமேஸ்காந்தன் (வயது 19) என்ற இளைஞர் மரணமடைந்துள்ளதுடன், நடராஜா கணேசன் (வயது 19), தியாகராஜா திலீபன் ஆகிய இருவர் காயமடைந்துள்ளனர். ஒருவர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன், மற்றையவர் கிசிச்சையின் பின்னர் வீடு சென்றுள்ளதாக வாழைச் சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

மரணமடைந்த இளைஞனின் சடலத்தை பிரேத பரிதோனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு வாழைச் சேனை மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரி.கருணா கரன் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (அ)




# 3,000 மெற்றிக் தொன் உணவு அமெரிக்காவால் நன்கொடை

கொழும்பு, ஓக. 27

இலங்கையில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு உணவு அளிப்பதற்காக 3,000 மெற்றிக் தொன் உணவினை அமெரிக்கா நன்கொடையாக வழங்கியுள்ளது. பாடசாலை மாணவர்களுக்கான போசாக்கை வழங்குவதற்காக அமெரிக்க விவசாயத் திணைக்களத்தின் ஊடாக இந்த நன்கொடை வழங்கப்பட்டுள்ளது. அமெரிக்க தூதுவர் ஜூலி சங் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவிடம் இந்த நன்கொடையை கையளித்தார். (அ)

# அரசியல் கைதிகளின் விடுதலை கண்துடைப்பு நாடகமாகக்கூடாது

## கூறுகின்றார் கே.வி.தவராசா

கொழும்பு, ஓக. 27

நல்லாட்சிக் காலத்தில் நடைபெற்றதைப் போன்று அரசியல் கைதிகளின் விடுதலை கண்துடைப்பு நாடகமாக அமைந்துவிடக்கூடாது என ஜனாதிபதி சட்டத்தரணி கே. வி.தவராசா தெரிவித்தார்.

சமூக வலைத்தளங்களில் கருத்துகளை வெளியிட்டமைக்காக கைது செய்யப்பட்டவரகளில் சிலரை 2017, 2019 ஆம் ஆண்டுகளில் விடுதலை செய்து 12 முதல் 26 வருடங்கள் சிறைகளிலுள்ள 46 அரசியல் கைதிகளின் விடுதலையை தவிர்த்து விடக்கூடாது என அவர் குறிப்பிட்டார்.

நல்லாட்சிக் காலத்தில் 217 அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாக வாக்குறுதி வழங்கப்படபோதும் போதிய சாட்சியங்களற்ற 61 கைதிகளை பிணையிலும் 23 கைதிகளை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பியும் விடுதலை செய்ததாக அவர் சுட்டிக்காட்டினார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, சட்டமா அதிபரினால் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, நீதிமன்றங்களினால் தண்டணை விதிக்கப்பட்ட அரசியல் கைதியோ அல்லது மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு விசாரணைக்குட்பட்டிருந்த அரசியல் கைதியோ விடுதலையாகவில்லை என்றும் கே.வி.தவராசா குறிப்பிட்டார். (அ)

# தேசியப்பட்டியல் மூலம் ரஞ்சனுக்கு எம்.பி பதவி!

## சஜித் பிரேமதாஸ உறுதி

கொழும்பு, ஓக. 27

சந்தர்ப்பம் கிடைக்கும் போது ரஞ்சன் ராமநாயக்கவை பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்க ஐக்கிய மக்கள் சக்தி உறுதியளித்துள்ளதாக கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ருவிட்டர் செய்தியில்,பதவி வெற்றிடமொன்று ஏற்பட்டால் தேசியப் பட்டியல் மூலம் நியமனம் வழங்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி இணங்கியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

2021 ஜனவரியில் நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டின் பேரில் ராமநாயக்கவுக்கு நான்கு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

அவரது தண்டனையைத் தொடர்ந்து, கடந்த ஆண்டு ராமநாயக்கவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி நீக்கப்பட்டது.

எவ்வாறாயினும், அவருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நேற்று நிபந்தனையுடன் கூடிய ஜனாதிபதி மன்னிப்பு வழங்கப்பட்டது. (அ)

ஈழநாடு
Eelanadu
27.08.2022 சனிக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 11

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 730 1370**

# ரஞ்சன் ராமநாயக்கவின் விடுதலை?

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் தண்டனை விதிக்கப்பட்டிருந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றார். ராமநாயக்க விடுதலை செய்யப்படுவதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பில் எதிர்பார்ப்புக்கள் நிலவிய நிலையிலேயே, தற்போது அவருக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த இடத்தில் – நீண்டகாலமாக எதுவித விசாரணைகளுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் கேள்வி எழுகின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொது மன்னிப்பின் அடிப்படையில் அவர்களை விடுவிக்க இணங்குவாரா? அதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றனவா?

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் தமிழ்த் தரப்புக்கள் பல வருடங்களாகக் குரலெழுப்பி வருகின்றன. ரணில் – மைத்திரி ஆட்சிக் காலத்தில் அவர்களில் பெரும்பாலானவர்களை விடுவிப்பதற்கான வாய்ப்புக்கள் இருந்தன. ஆனாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இது குறித்துப் பிரத்தியேக நடவடிக்கைகளை திட்டமிட்டு முன்னெடுக்கவில்லை. ஐந்து வருட காலத்தில் படிப்படியாக அவர்களில் கணிசமானவர்களை விடுவித்திருக்கலாம். ஆனால், விடயங்கள் சரியாகக் கையாளப்படவில்லை. புதிய அரசியல் யாப்புக்கான கற்பனையுடனேயே ஐந்து வருடங்கள் வீணாகின. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நூறு நாள் வேலைத்திட்டத்தின்கீழ் இவ்வாறான சில நீண்டகால பிரச்னைகளைத் தீர்த்திருக்க முடியும். ஆனால், சம்பந்தன் இந்த விடயத்தில் பிரத்தியேக கவனம் செலுத்தவில்லை.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் உண்மையிலேயே தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு அக்கறை இருக்கின்றதா? அவர்களின் வாழ்வு எக்கேடுகெட்டாவது போகட்டுமென்று எண்ணுகின்றார்களா? தமிழ் அரசியல்வாதிகளின் செயல்பாடுகளை உற்று நோக்கினால் இவ்வாறான கேள்விகள் தவிர்க்க முடியாதவையாகின்றன. ஏனெனில், அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் உதட்டளவிலான ஈடுபாட்டைத்தான் பலரும் காண்பிக்கின்றனரெனத் தெரிகின்றது. பாராளுமன்றத்தில் பேசிவிட்டால் தங்களின் பணி முடிந்துவிட்டதாகவே பலரும் எண்ணிக் கொள்கின்றனர்.

கூட்டமைப்புக்கு மாற்றானவர்களாகத் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அறிக்கைளுக்கு அப்பால் எதனையும் செய்ய முயற்சிக்கவில்லை. தங்களின் மாற்று அரசியலுக்கான ஒரு துருப்புச்சீட்டாகவே இவ்வாறான பிரச்னைகளைக் கையாள முயற்சிக்கின்றனர். அரசாங்க தரப்பினருடன் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் எவ்வித பேச்சுக்களையும் முன்னணி இதுவரையில் மேற்கொண்டதில்லை.

பாராளுமன்றத்தில் பேசுவதால் மட்டும் பிரச்னைகள் தீர்ந்துவிடுமென்றால், தமிழ் மக்கள் எதிர்கொண்டுவரும் பல்வேறு பிரச்னைகள் எப்போதோ தீர்ந்திருக்க வேண்டுமல்லவா! பாராளுமன்றத்தில் பேசத்தான் வேண்டும். ஆனால், பேசுகின்ற விடயங்களை அரசியல் மட்டத்தில் கையாளுவதற்கான முயற்சிகளையும் தமிழ் கட்சிகள் முன்னெடுக்க வேண்டும்.

இதுவரையில் நடந்தவற்றை விடுவோம். இப்போதுள்ள நிலைமையை சரியாகக் கையாள்வதன் ஊடாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசி, அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் பிரத்தியேக முயற்சிகளை எடுக்க முடியும். அதற்கான வாய்ப்புக்கள் இப்போது உண்டு. கூட்டமைப்பு இதற்கான பிரத்தியேக கலந்துரையாடல்களை முன்னெடுக்கலாம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஊடாக அரசியல் கைதிகளை முழுமையாக இல்லாவிட்டாலும்கூட குறிப்பிட்டளவானவர்களை விடுவிக்க முடியும். இதனை கட்டம்கட்டமாக முன்னெடுக்கலாம். ஆனால், இதற்கான முயற்சியை தமிழர் தரப்பிலிருந்துதான் முன்னெடுக்க வேணடும். அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் வலியுறுத்திவரும் சிவில் சமூக குழுக்கள் என்போரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பிரத்தியேகமாக அணுகுவதற்கான முயற்சியை மேற்கொள்ளலாம். அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கு வாய்ப்பான தருணமிது. இந்த சந்தர்ப்பத்தை விட்டால் பின்னர் இந்த விடயத்தைக் கையாள்வது கடினமானது.

# சந்நிதியில் கொடியேற்றத்தில் நடப்பது என்ன?

செந்தமிழ்ச் சொல்லருவி
**சந்திரமௌலீசன் லலீசன்**





## ஆற்றங்கரை வேலனுக்கு இன்று 27.08.2022 கொடியேற்றம்

*ஆகமம் சாராத பக்திசார் வழிபாட்டுமையமாக இருக்கும் தொண்டைமானாறு செல்வச்சந்நிதியின் கொடியேற்ற நிகழ்வு ஏனைய ஆலயக் கொடியேற்ற நிகழ்வுகளில் இருந்து வேறுபட்டதாகும்.*

*ஆவணி மாத பூர்வபக்க பிரதமை கூடும் நேரத்தில் இங்கு கொடியேற்றம் இடம்பெறுவது வழமை. அந்த வகையில் இம்முறை நாளை 27.08.2022 சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கொடியேற்றம் இடம்பெறவுள்ளது.*

*வைரவப் பெருமானுக்குக் காப்புக் கட்டிப் பின்னர் பிள்ளையார் பூசை மூலவரான வேலவருக்குப் பூசை என்பன இடம்பெற்றதைத் தொடர்ந்து கொடியேற்றத்தின் முக்கிய நிகழ்வான கேடகப் பூசை இடம்பெறும்*

*ஆலய வாயிலில் மூலஸ்தானத்தை நோக்கியவாறு உள்ள நந்திக்கு (இடபத்திற்கு) முன்பாக கேடகம் வைக்கப்பட்டிருக்கும் . (கேடகம் என்பது சுவாமியைக் காவிச்செல்லும் கூடு) கேடகத்தின் உச்சியில் உள்ள கலசத்தில் தருப்பை, ஏழு மாவிலைகள் என்பவற்றைப் பட்டுத் துண்டால் கட்டி பூசை இடம்பெறும். இதனைக் கலச பூசை என்கின்றனர். இதுவே கொடியேற்றத்தின் முக்கிய நிகழ்வு.*

*கொடியேற்றம் நிகழ்ந்ததன் அறிகுறியாக ஆலய வாயிலில் சேவல் கொடியைப் பறக்க விடுவர் அதன்பின் எழுந்தருளி வேலவருக்குப் பூசை இடம்பெறும். அவரை கேடகத்தில் எழுந்தருளச் செய்து உள்வீதியுலா வரச் செய்வர்.*

*வள்ளி அம்மன் வாசலுக்கு எழுந்தருளி வேலவர் வந்ததும் அவரை வள்ளி அம்மன் கோவிலுக்குக் கொண்டு சென்று தீர்த்தக் குளத்தில் நீர் எடுத்து வேலவருக்கும் வள்ளி அம்மைக்கும் விசேட பூசை இடம்பெறும்.*

*தொடர்ந்து கேடகத்தில் எழுந்தருளி வேலவர் வெளிவீதியுலா வருவார். கோவிலுக்கு வடக்குப் புறமுள்ள வாயிலில் (கதிர்காம வாயில்) தீர்த்தக் குளத்தில் நீர் எடுத்து கும்பம் வைத்து அர்ப்பணிப்பர். நூற்றுக் கணக்கான தேங்காய்களை சிதறு தேங்காயாக உடைத்து அர்ப்பணிப்பர்.*

*அர்ப்பணங்கள் நிறைவுற்றதும் வேலவர் தனது சந்நிதானத்தை வந்தடைவார்.*

*சந்நிதியில் பூசை செய்பவர்களைப் பூக்காரர் என அழைப்பர். இவர்கள் வாய்கட்டியே பூசை செய்வர்.*

*பூசை முறை தமக்குத் தெரியாது என இவ்வாலயத்தைத் தாபித்த மருதர் கதிர்காமர் முருகப் பெருமானிடம் கோரியபோது முருகன் அவரை கண்மூடுமாறு பணித்ததாகவும் அடுத்த கணம் கதிர்காமத்தில் அவரை சேர்ப்பித்ததாகவும் அதன் மூலம் பூசை முறையையும் வேல் ஒன்றையும் அவர் பெற்றதாகவும் ஐதிகம் உண்டு.*

*முருகனும் கதிர்காமரும் உரையாடிய இடம் ஆலய முகப்பில் உள்ள நந்திக்கு அருகில் உள்ள இரண்டு குந்துகள் ஆகும். இந்த இரண்டு குந்துகளிலும் அவர்கள் எதிர் எதிர் இருந்து கதைத்தார்கள் என்ற நம்பிக்கையில் அக்குந்துகளில் எவரும் இருப்பதுவும் இல்லை. ஏன் அதற்குக் குறுக்கே போகக் கூடாது (அதாவது நேர் வாயிலால் கோவிலுக்குள் போகக்கூடாது) என்ற நம்பிக்கையும் நிலவுகின்றது.*

*மூலவராக வேற்பெருமான் உள்ளார். இதைவிட அடியவர்கள் வழங்கிய வேல்களையும் இங்கு வைத்துள்ளனர்.*


*முருகனது உபதேசப்படி உப்பு இடாமல் 65 ஆலம் இலைகளில் வெண்பொங்கல் படைக்கப்படுகின்றது. இதுவே முருகனுக்கான பிரசாதம். இதனை மருந்து என்றுதான் அழைப்பர்.*

*சந்நிதியில் விபூதி வாங்கும் போது ஒரு கையால் வாயைப் பொத்தியபடி நிற்க பூசகர் விபூதியைப் பெறவேண்டியவருடைய சிரசில் விபூதியை தூவி நெற்றியிலும் பூசிவிடும் மரபும் உள்ளது.*

*மருதர் கதிர்காமர் முருகனிடம் தனக்கு விபூதி கொடுக்கத் தெரியாதே என்று கூறிய போது இப்படி விபூதியைக் கொடு என முருகன் வழிப்படுத்தினார் என நம்புகின்றனர். இதனால் அவரது சந்ததியினரும் அந்த மரபைப் பின்பற்றுகின்றனர்.*

*வேல் வழிபாடு புகழுக்கு உரியதாக விளங்கும் சந்நிதி கந்தனை வாழ்த்தி வணங்குவோம்.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு




**மேடம்**
புதிய முயற்சி ஒன்று நிறைவேறும். வரவு அதிகரிக்கும்.மனம் விரும்பும் வகையில் செயல்படுவீர்கள். நிதிநிலை உயரும். எதிர்பார்ப்பு பூர்த்தியாகும். சிலர் வெளியூர் செல்ல நேரிடும்.

**இடபம்**
நீண்டநாள் எண்ணம் நிறைவேறும். குடும்பத்தினர் நலனில் அக்கறை செலுத்துவீர்கள். வீடு, மனை வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். தடைகளைக் கடந்து செயல்படுவீர்கள்.

**மிதுனம்**
செயல்களில் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தினரின் தேவைக்காக செலவு செய்வீர்கள்.நீண்டநாள் எண்ணம் ஒன்று பூர்த்தியாகும். குடும்பத்தினர் ஆதரவாக இருப்பர்.

**கடகம்**
நினைத்ததை நிறைவேற்றி மகிழ்வீர்கள். எதிர்காலம் பற்றிய சிந்தனை அதிகரிக்கும்.மனதில் வீண் சிந்தனை உண்டாகும். உங்கள் முயற்சி நிறைவேறும். எதிரி தொல்லை அதிகரிக்கும்.

**சிம்மம்**
வீண் செலவு அதிகரிக்கும். குடும்பத்தினர் உங்கள் நிலையைப் புரிந்து கொள்ளாமல் செயல்படுவர். செலவு கைமீறிச் செல்லும். வீடு, மனை வாங்கும் முயற்சி பலிதமாகும்.

**கன்னி**
எதிர்பார்ப்பு நடந்தேறும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். புதிய முயற்சி கை கொடுக்கும்.எதிர்பார்த்த வருமானம் வந்து சேரும். நெருக்கடி மறையும். இனிய சம்பவத்தால் மகிழ்வீர்கள்.

**துலாம்**
நண்பர்கள் உதவியுடன் முயற்சி ஒன்றில் ஈடுபடுவீர்கள். கவனமுடன் செயல்பட வேண்டிய நாள். முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். எதிர்பாலின ரின் உதவியால் நன்மை காண்பீர்கள்.

**விருட்சிகம்**
அறிவாற்றல் வெளிப்படும். எதிர்பார்த்த வருமானம் வந்து சேரும். நன்மையான நாள்.குடும்பத்தினர் ஒத்துழைப்பர். முயற்சியில் வெற்றி கிடைக்கும். சுயதொழில் தொடங்கும் எண்ணம் ஏற்படும்.

**தனுசு**
எதிரிகளின் கை மேலோங்கும்.சிந்தித்து செயல்பட வேண்டிய நாள். எதிர்பார்த்த உதவி கிடைக்க தாமதமாகும். முயற்சி இழுபறியாகும். புதிய முயற்சிகள் நிறைவேறாமல் போகும். சிரமம் உண்டாகலாம்.

**மகரம்**
புதிய சிந்தனை உருவாகும். எதிர்பார்ப்பு நிறைவேறும்.குழப்பம் விலகும். செலவிற்கேற்ற வரவு வரும். பணவரவு அதிகரிக்கும். தம்பதிக்குள் இருந்த பிரச்னைகள் விலகும்.

**கும்பம்**
செயல்களில் வெற்றி காண்பீர்கள். வாழ்க்கைத் துணையின் வழியே எதிர்பார்ப்பு நிறைவேறும். முயற்சிகள் நிறைவேறும். விலகிச் சென்றவர்கள் உங்களைத் தேடி வருவர். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மீனம்**
சிலர் வெளியூர் பயணம் மேற்கொள்வர்.வேலைப் பளுவால் உடலும் மனமும் சோர்வடையும். பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி சிந்திப்பீர்கள். குடும்பத்தினரால் சில நெருக்கடிகளை சந்திப்பீர்கள்.

# திராவிட “மொடல்” அரசாங்கம் இந்தியாவுக்கே வழிகாட்டுகிறது

## முதலமைச்சர் ஸ்டாலின்



ஈரோடு, ஓக. 27

“அனைவரும் பாராட்டக்கூடிய, அனைவருக்கும் வழிகாட்டக்கூடிய அரசாக தமிழ்நாடு அரசு செயல்படுகிறது. திராவிட மொடல் அரசானது இன்று இந்தியாவுக்கே வழிகாட்டக்கூடிய அரசாக இருக்கிறது. நம் இட ஒதுக்கீடு என்ற சமூகநீதி தத்துவத்தைத்தான் பல்வேறு மாநிலங்கள் பின்பற்றி வருகின்றன. மாநில சுயாட்சி என்ற தத்துவமும் திராவிட இயக்கம் கொடுத்த கொடைதான்” என்று தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

நேற்று ஈரோட்டில் கருணாநிதியின் சிலையை திறந்து வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற திட்டத்துக்கு சென்னை உயர் நீதிமன்றம் சட்டபூர்வமான அங்கீகாரம் கொடுத்துள்ளது. ஆலயங்களில் அர்ச்சகர்களாக நியமிக்கப்படுபவர்கள் அதற்கான பயிற்சியை பெற்றிருந்தால் போதும். இதில் சாதி என்பது ஓர் அளவுகோலாக இருக்கக்கூடாது.

இத்தகைய சமூக நீதியை காக்கக்கூடிய அரசாணையை இரத்து செய்ய வேண்டும் என்று சிலர், நீதிமன்றம் சென்று வழக்கு தாக்கல் செய்தனர். அதற்கு தடை விதிக்க சென்னை உயர் நீதிமன்றம் மறுத்துவிட்டது. தந்தை பெரியாரும், தலைவர் கலைஞரும் இருந்திருந்தால் மகிழ்சியடைந்திருப்பார்கள். இது நம் கொள்கைக்கு கிடைத்திருக்கக்கூடிய வெற்றி.

மாநில சுயாட்சி என்ற தத்துவமும் திராவிட இயக்கம் கொடுத்த கொடைதான். 50 ஆண்டு கால தமிழ்நாட்டின் வளர்ச்சி, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் சிந்தனையில் உருவான திட்டங்களின் வளர்ச்சிதான்” என்று கூறினார். (ஐ)

# அ. தி. மு. க. பணிமனை மோதல் பன்னீர்செல்வம் மீது 7 வழக்குகள்

சென்னை, ஓக. 27

அ. தி. மு. க. தலைமை அலுவலகத்தில் நடந்த மோதலின்போது ஆவணங்களை எடுத்துச் சென்றதாக முன்னாள் அமைச்சர் சி. வி. சண்முகம் அளித்த முறைப்பாட்டின்படி ஓ. பன்னீர்செல்வம், அவரது ஆதரவாளர்கள்மீது 7 பிரிவுகளின்கீழ் பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.



அ. தி. மு.கவில் ஒற்றை தலைமையை ஏற்படுத்தும் நோக்கில் அந்தக் கட்சியின் பொதுக் குழு கூட்டம், கடந்த மாதம் 11ஆம் திகதி வான கரத்தில் நடைபெற்றது. அந்த நேரத்தில் ஓ.பன் னீர்செல்வம் மற்றும் அவரின் ஆதரவாளர்கள், அ. தி. மு. க. தலைமை அலுவலகத்துக்கு வந்தனர்.

பூட்டியிருந்த அலுவலகத்தின் கதவை உடைத்து உள்ளே புகுந்தனர். அப்போது ஓ. பன்னீர்செல்வம், பழனிசாமி ஆதரவாளர்கள் இடையே கடும் மோதல் ஏற்பட்டு கலவரமானது. இதில், 47 பேர் காயம் அடைந்தனர்.

இதையடுத்து அ. தி. மு. க. அலுவலகத்துக்கு ‘சீல்’ வைக்கப்பட்டது. பின்னர் நீதிமன்ற உத்தரவின் பேரில் கடந்த மாதம் 21ஆம் திகதி ‘சீல்’ அகற்றப்பட்டு அலுவலகத்தின் திறப்பு பழனிசாமி தரப்பிடம் ஒப்படைக்கப்பட்டது.

அதன்பின், அ. தி. மு. க. அமைப்பு செய லாளர் சி.வி. சண்முகம், கடந்த மாதம் 23 ஆம் திகதி ராயப்பேட்டை காவல் நிலையத்தில் அளித்த புகாரில், ‘அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் இருந்து கட்சி தொடர்பான அசல் பத்திரங்கள், ஆவணங்கள், பற்றுச் சீட்டுக்கள் 2 கணனிகள், கட்சி பெயரில் உள்ள சொத்து ஆவணங்கள், ரூ.31 ஆயிரம் பணம் உள்ளிட்டவை கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. ஓ. பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள் கட்சி அலுவலகத்தில் இருந்து ஆவணங்களை எடுத்துச் சென்றுள்ளனர்’ என கூறியிருந்தார். அதுதொடர்பான காணொலி ஆதாரங்களையும் அளித்திருந்தார்.

இந்த வழக்கில் சிலர் கைது செய்யப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அ. தி. மு. க. தொண்டர்களை விலைபேசும் பன்னீர்செல்வம்!

## எடப்பாடி பழனிசாமி தரப்பு சாடல்

மதுரை, ஓக. 27

அ. தி. மு. க. கட்சியின் தொண்டர்களை விலை பேசும் யுத்தத்தை பன்னீர்செல்வம் தொடங்கியுள்ளார் என்று முன்னாள் அ. தி. மு. க. அமைச்சர் ஆர். பி. உதயகுமார் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில், ”அ. தி. மு. கவை எம்ஜிஆர். ஏழை எளிய மக்களுக்காக 17.10.1972 ஆம் ஆண்டு தொடங்கினார். தற்போது 50 ஆண்டு விழா காணும் அரசியல் பயணத்தில் ஜெயலலிதா மூன்றாம் பெரிய இயக்கமாக உருவாக்கி வரலாறு படைத்தார்.

அ. தி. மு. க. தொண்டர்களின் நம்பிக்கை இழந்து, அரசியல் எதிர்காலத்தை தொலைத்துவிட்டு, ஆதரவு இல்லாமல் நிற்கின்ற பன்னீர்செல்வம் தனக்கு செல்வாக்கு இருப்பதாகக் காட்டிக் கொள்ள மௌன யுத்தத்தை தொடங்கியவர் தற்போது விலை பேசும் யுத்தத்தை தொடங்கியுள்ளார்,

தன்னுடைய செல்வாக்கை காட்டிக் கொள்ளும் முயற்சி அவருக்கு பின்னடை வைத்தான் தரும், அ. தி. மு. கவில் விசுவாசமுள்ள தொண்டர்கள் உள்ளனர் பதவி, பணம் என்று விலைபேசி தொடர்ந்து முயற்சித்து வருகின்றனர் பன்னீர்செல்வமும் அவரின் புதல்வர்களும். தொண்டர்கள் ஆதரவைப் பெற பதவி, பணம் என்று விலைபேசி வரும் நடவடிக்கைகள் தொண்டர்களை வேதனை அடையச் செய்துள்ளது.

தொண்டர்களின் ஆதரவைப் பெற, தன் சுயநலத்தால் ஆசை வார்த்தை கூறி பேரம் பேசுவது உங்களுக்கு தரம் தாழ்ந்த செயலாகும், சுயநலத்தால் எதிலும் வெற்றி பெற முடியாது.

நான் பன்னீர்செல்வத்தை காயப்படுத்துவதற்காக சொல்லவில்லை. உண்மையைதான் சொல்லுகிறேன், எடப்பாடியாரின் சீர்திருத்த முடிவுக்கு ஒன்றரை கோடி தொண்டர்கள் உள்ளனர். யாரை விலை பேசினாலும் அவர்கள் விசுவாச தொண்டர்களாக இருக்க மாட்டார்கள். நீங்கள் செய்யும் நடவடிக்கையால் வரலாறு உங்களை மன்னிக்காது““ - என்றுள்ளது. (ஐ)

# பயங்கரவாதச் சட்டத்தால் ஜெனிவாவில் சிக்கல் வரும்

## அரசை எச்சரிக்கின்றார் ஜி.எல்.பீரிஸ்

கொழும்பு, ஓக. 27

**ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வது பொருத்தமானதல்ல என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் பேராசிரியர் ஜீ.எல்.பிரிஸ் தெரிவித்துள்ளார்.**

ஊழியர் மட்ட கலந்துரையாடலுக்கு வருகை தந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கு இது தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்துவதாக அவர் குறிப்பிட்டார்.

# எரிபொருள் நெருக்கடிக்கு கியூ. ஆர் முறை தீர்வாகாது

## ஒப்புக்கொள்கின்றார் காஞ்சன

கொழும்பு, ஓக. 27

தற்போதைய எரிபொருள் நெருக்கடிக்கு தேசிய எரிபொருள் உரிமம் அல்லது கியூ.ஆர். முறைமை திட்டவட்டமான தீர்வாகாது என மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

நாட்டின் நிதித் திறனை கருத்திற்கொண்டு எரிபொருளை இறக்குமதி செய்ய வேண்டியுள்ளதுடன் அதனைச் சிறந்த முகாமைத்துவத்துடன் வாடிக்கையாளருக்கு விநியோகிக்க குறித்த முறைமை நடைமுறைப் படுத்தப்பட்டதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

தொலைக்காட்சியில் ஒன்றில் ஒளிபரப்பான நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

மத்திய வங்கியின் ஊடாக எரிபொருளைப் பெறுவதற்கு ஒதுக்கப்படும் பணத்தின் அடிப்படையில் எரிபொருள் விநியோக வரம்பு தீர்மானிக்கப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# அரிசி இறக்குமதியை நிறுத்தக் கோரிக்கை

கொழும்பு, ஓக. 27

இலங்கைக்கு அரிசி இறக்குமதி செய்வதை உடனடியாக நிறுத்துமாறு பாரிய ஆலை உரிமையாளர்கள் உள்ளிட்ட அரிசி வியாபாரிகள் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீரவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நெல் கொள்வனவு தொடர்பில் விவசாய அமைச்சர் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

டிசெம்பர் மாதம் வரை நாட்டில் போதியளவு அரிசி உள்ளதாகவும் அவர்கள் அமைச்சரிடம் சுட்டிக்காட்டினர்.

இந்த வருடத்தின் முதல் ஐந்து மாதங்களில் 50,000,000 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும், அதற்காக அரசாங்கம் 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிட்டுள்ளதாகவும் அரிசி ஆலை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இந்த வருட இறுதி வரை அரிசி இறக்குமதி தொடர்ந்தால் அரிசியின் அளவு 50 இலட்சத்து 50 ஆயிரம் மெற்றிக் தொன்னை தாண்டும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இக்கலந்துரையாடலில் பிரதான அரிசி ஆலை உரிமையாளர்கள் உட்பட வர்த்தகர்கள் பலரும் கலந்துகொண்டனர். (அ)

# மின் மயமாக்கப்படும் ஓட்டோக்கள்

கொழும்பு, ஓக. 27

300 ஓட்டோக்களை மின்சார மயமாக்கும் முன்னோடித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிராந்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை எதிர்கொண்டுள்ள எரிபொருள் நெருக்கடி நிலைமைகளுக்கு தீர்வு காணும் வகையில் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டத்தின் அனுசரணையுடன் இந்த திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பான சட்ட பின்னணியினை தயாரிப்பதற்கான முன்மொழிவுகளை பெற்றுக்கொள்வதற்கான விசேட மாநாடு எதிர்வரும் 30 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. (அ)

# இடைக்கால பட்ஜெட்டின் பின்பே புதிய அமைச்சரவை நியமனம்!

கொழும்பு, ஓக. 27

தற்போதுள்ள தற்காலிக அமைச்சரவைக்கு பதிலாக புதிய அமைச்சரவை, இடைக்கால வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் நியமிக்கப்பட உள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

பெரும்பாலும் சர்வ கட்சி அரசு வேலைத் திட்டத்தின் கீழ் இந்த புதிய அமைச்சரவை நியமிக்கப்படுமென்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எதிர்வரும் 30ஆம் திகதி திருத்தம் செய்யப்பட்டுள்ள வரவு-செலவுத்திட்ட சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது. சர்வகட்சி அரசு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனைத்து கட்சிகளுடனும் பேச்சு நடத்தியுள்ளார். அதன்படி சர்வகட்சி அரசை அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எவ்வாறெனினும் தற்போதைய அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள பொது ஜன பெரமுன கட்சியைச் சேர்ந்த அமைச்சர்களுடன் ஏற்கனவே அமைச்சுப் பதவிகளிலிருந்த அமைச்சர்கள் சிலரும் புதிய அமைச்சரவையில் அமைச்சர்களாக நியமிக்கப்படுபடவுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

# நல்லூர் ஆலய தேர் உற்சவத்தில் 30 பவுண் தங்க நகைகள் திருட்டு

## ஐவர் பொலிஸாரினால் கைது

யாழ்ப்பாணம், ஓக. 27

யாழ்ப்பாணம் - நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த தேர் உற்சவத்தில் மாத்திரம் 30 பவுண் நகை திருடப்பட்டுள்ளன என்று முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகத்தில் ஒரு சிறுவன் மற்றும் 4 பெண்கள் உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டு ஆண்டுகளின் பின்னர் நல்லூர் கந்தனின் தேர்ப் பவனி நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதனால் அதிகளவான பக்தர்கள் ஆலயத்துக்கு வருகை தந்திருந்தனர். சன நெரிசலை சாதகமாக்கிய திருடர்கள் தங்கள் கைங்கரியத்தைக் காட்டினர். 2 தாலிக் கொடி மற்றும் சங்கிலிகள் உள்பட 30 பவுண் நகைகள் களவாடப்பட்டன என்று நல்லூர் உற்சவகால பொலிஸ் காவலரணில் 7 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நீர்கொழும்பைச் சேர்ந்த பெண் ஒருவர் சங்கிலி அறுக்க முற்பட்டபோது கையும் மெய்யுமாக பிடிபட்டுள்ளார். அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் நீர்கொழும்பைச் சேர்ந்த மேலும் 3 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் பொலிஸாரின் விசேட தேடுதல் நடவடிக்கையின்போது கோப்பாயைச் சேர்ந்த 15 வயதுச் சிறுவனும் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளான். (அ)

# சிறையில் அதிகரிக்கும் கைதிகள் எண்ணிக்கை!

கொழும்பு, ஓக. 27

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் புள்ளிவிவரங்களின்படி, 2022 ஆம் ஆண்டில் அனைத்து சிறைச்சாலைகளிலும் பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்காக சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

நேற்று முன் தினம் வரை 8,284 கைதிகளும் 14,381 சந்தேக நபர்களும் பதிவு செய்யப்பட்டுள்ளனர் எனச் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

இந்த ஆண்டில் மாத்திரம் மொத்தம் 22,666 பேர் சிறைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார். (அ)

# 2 ஆண்டுகளுக்கு ரஷ்யாவிலிருந்து நுரைச்சோலைக்கு நிலக்கரி வரும்!

கொழும்பு, ஓக. 27

நுரைச்சோலை நிலக்கரி ஆலைக்கு இரண்டு வருடங்களுக்கு நிலக்கரியை வழங்குவதற்கு ரஷ்ய நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது .

மின் உற்பத்தி நிலையத்திற்கு தேவையான நிலக்கரியை வழங்குவதற்காக ஒப்பந்தம் மூலம் இரண்டு நிறுவனங்கள் அழைக்கப்பட்டு ரஷ்ய நிறுவனம் தேர்வு செய்யப்பட்டதாகவும் 6 மாத கால அவகாசத்துடன் முன்பணம் செலுத்தாமல் இரண்டு ஆண்டுகளுக்கு நிலக்கரி வழங்க அந்த நிறுவனம் முன்வந்துள்ளதாகவும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது அனல்மின் நிலையத்துக்கு நிலக்கரி வழங்க முன்வந்துள்ள நிறுவனம் விலைச் சூத்திரத்தின்படி நிலக்கரியை வழங்குவதாகவும், முந்தைய விநியோகத்தைவிட 4-5 மெற்றிக் தொன் இயற்கை நிலக்கரியையதிகமாக வழங்க ஒப்புக்கொண்டுள்ளதாகவும் இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட உள்ளதாகவும் அவர் கூறினார்.

தற்போது அனல்மின் நிலையத்தில் நிலக்கரி இருப்பதாகவும், புதிய ஒப்பந்தத்தின்படி, ஒக்ரோபர் இறுதியில் நிலக்கரியை வழங்கும் சம்பந்தப்பட்ட நிறுவனம் ஒப்புக்கொண்டதாகவும் அந்த அதிகாரி மேலும் கூறினார். (அ)

# புதிய ஓமிக்ரான் திரிபு பரவல் மிகவும் தீவிரம்

## சுகாதாரத்துறை எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 27

பரிசோதனைகள் முறையாக மேற்கொள்ளப்பட்டால், நாளாந்தம் கொரோனா தொற்று உறுதி செய்யப்படுபவர்கள் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டும் என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

புதிய ஓமிக்ரான் திரிபு குறிப்பிடத்தக்க அளவில் பரவியுள்ளதால், பூஸ்டர் டோஸ்களை விரைவில் பெற்றுக் கொள்ளுமாறும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கதின் தலைவர் உபுல் ரோஹன பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த நோய் சிறுவர்கள் மத்தியில் மிக வேகமாக பரவி வருவதாக தெரிவித்த அவர், சிறிய அறிகுறி தென்பட்டால், அவர்களை வீட்டில் தனிமைப் படுத்துமாறும் கூறியுள்ளார்.

இதேவேளை, நோயாளர்களை தங்க வைப்பதற்கான தனிமைப்படுத்தப்பட்ட நிலையங்கள் எதுவும் தற்போது இயங்கவில்லை எனச் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

பெரும்பாலானவர்கள் தடுப்பூசியை செலுத்தி உள்ளதால் அவர்கள் வீட்டிலேயே தம்மை தாமே தனிமைப்படுத்திக்கொள்ள முடியும் எனவும் அவர் கூறினார்.

ஈழநாடு



# கொரோனாவை காட்டிலும் மிகவேகமாக பரவும் டெங்கு

## இவ்வருடம் இதுவரை 52,000 பேர் பாதிப்பு

கொழும்பு, ஓக. 27

**இலங்கையில் டெங்கு நோய் தாக்கம் மிக வேகமாக பரவி வரும் நிலையில் 2022 இல் இதுவரை 52 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, கண்டி, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் ஆம் திகதி முதல் 3 ஆம் திகதி வரை விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பொறுப்பதிகாரி வைத்தியர் நிமல்கா பன்னில ஹெட்டி தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன் தினம் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது கருத்து தெரிவித்த வைத்தியர் நிமல்கா பன்னில ஹெட்டி, குறித்த பிரதேசங்களில் டெங்கு நோயாளர்கள் அதிகரித்துள்ளமையினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

கடந்த மாதம் 11 ஆயிரத்து 500 பேர் டெங்கினால் பாதிக்கப்பட்டிருந்ததுடன், ஓகஸ்ட் மாதத்தில் 5 ஆயிரத்து 600 ஆக குறைவடைந்துள்ளது.

இருப்பினும் எதிர்வரும் காலங்களில் பருவமழையினால் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்படலாம் எனவும் வைத்தியர் நிமல்கா பன்னில ஹெட்டி தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

டெங்கு தடுப்பு வேலைத்திட்டங்களின் போது பொலிசார் மற்றும் இராணுவத்தினரின் ஆதரவைப் பெற்றாலும் டெங்கு பரவும் இடங்களை சுத்தம் செய்வதும், அந்தந்த குடியிருப்புகளுக்கு அருகாமையில் தண்ணீர் தேங்கியுள்ள பகுதிகளை கண்காணிப்பதும் பொது மக்களின் பொறுப்பாகும். அதிக பங்காற்றுவதன் மூலமே டெங்கு நுளம்புகள் பரவுவதைக் குறைக்க முடியும்.

தனியார் மற்றும் அரச அலுவலக கட்டடங்கள், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் கட்டுமானத் தளங்களுக்கு அருகாமையில் அதிகளவில் நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை அவதானித்துள்ளோம்.

கடந்த ஆண்டு முழுவதும் 36 ஆயிரம் டெங்கு தொற்றாளர்கள் மட்டுமே பதிவாகியிருந்தனர். இருப்பினும் 2022 ஆண்டு ஆரம்பத்தில் இருந்து இன்று வரையில் 52 ஆயிரத்து 500 தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அத்துடன் அதிகாரிகள் தொடர்ந்து பொது மக்களுக்கு டெங்கு தொற்று தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மூலம் நுளம்புகள் பெருகும் இடங்களை சுத்தம் சுத்தம் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எனினும் பொது மக்களின் ஆதரவின்றி அடுத்த நான்கு மாதங்களில் இந்த எண்ணிக்கையை குறைக்க முடியாது-என்றார். (அ)

# கிளிநொச்சியில் விபத்து; இளம் குடும்பஸ்தர் பலி!

கிளிநொச்சி, ஓக. 27

கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இளம் குடும்பஸ்தர் பலியாகியுள்ளார்.

குறித்த விபத்து நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

பாரதிபுரம் மத்திய வீதியில் எதிரெதிரே பயணித்த மோட்டார் சைக்கிளும், கப் வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில், மோட்டார் சைக்கிளில் பயணித்த 30 வயதுடைய துரைராசா டிலக்சன் என்னும் இளம் குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி கிருஸ்ணபுரம் பகுதியைச் சேர்ந்த உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு, விசாரணைகளின் பின்னர் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட கிளிநொச்சி பொலிஸார், கப் ரக வாகனத்தின் சாரதியை கைது செய்து, இன்று நீதிமன்றில் முன்னிறுத்தினர்.

குறித்த சந்தேக நபரை எதிர்வரும் 6ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# கோட்டாவுக்கு பிரதமர் பதவி?

## ஆட்சேபிக்காதாம் பொதுஜன பெரமுன

கொழும்பு, ஓக. 27

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இலங்கை வந்தவுடன் பிரதமர் பதவியை ஏற்கத் தயாராக இருந்தால் தாம் ஆட்சேபிக்கப் போவதில்லை என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களான மதுர விதானகே மற்றும் பிரதீப் உந்துகொட ஆகியோர் இதனைத் தெரிவித்துள்ளனர்.

6.9 மில்லியன் மக்களின் ஆதரவுடன் கோட்டாபய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதாக தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர்கள், அவர் பிரதமராக நியமிக்கப்பட்டுவதை எவரும் ஆட்சேபிக்கப் போவதில்லை என்றும் தெரிவித்தனர். (அ)

# கடைக்கு சென்றவர் கத்தியால் வெட்டி கொலை செய்யப்பட்டு தீ மூட்டி எரிப்பு

## பெண் ஒருவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, ஓக. 27

கடைக்குச் சென்ற நபர் ஒருவரை கத்தியால் வெட்டி கொலை செய்ததுடன், உடலை தீ வைத்து எரித்த சம்பவம் தொடர்பில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிபில நாகல பிரதேசத்தில் இந்த சம்பவம் பதிவாகியுள்ளது. குறித்த பெண் நடத்தும் கடைக்கு வந்த நபரே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதே பகுதியைச் சேர்ந்த 66 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் குறித்த நபர் நாகல பிரதேசத்தில் சந்தேகத்திற்கிடமான பெண்ணின் கடைக்கு சென்ற போது வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இதன்போது குறித்த பெண்ணுக்கும் உயிரிழந்த நபருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

பின்னர் சந்தேக நபர் கத்தியால் குறித்த நபரை வெட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடையில் இருந்த பெற்றோல் போத்தலை எடுத்து இறந்தவரின் உடலில் ஊற்றி தீ வைத்து கொளுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சடலம் மஹியங்கனை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. கொலைச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பிபில பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (அ)

# நல்லூர் ஆலயச் சூழலில் ஊதுபத்தி விற்ற பெண்கள் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், ஓக. 27

நல்லூர் ஆலயச் சூழல் உட்பட யாழ்ப்பாண நகர் பகுதிகளில் ஊதுபத்தி விற்பனையில் ஈடுபட்ட 03 பெண்கள், ஆணொருவர் மற்றும் அவர்களை வேலைக்கு அமர்த்திய விடுதி உரிமையாளர் ஆகிய ஐவரை எதிர்வரும் 09ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அதேவேளை இவர்களிடம் இருந்து கைக்குழந்தை ஒன்றும் ஆறு சிறுவர்களும் மீட்கப்பட்டுள்ளனர். அதில் கைக்குழந்தையை தாயுடன் இருக்க அனுமதித்த நீதவான், ஏனைய 06 சிறுவர்களையும் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார்.

நல்லூர் ஆலயச் சூழல் மற்றும் யாழ்ப்பாண நகர்ப் பகுதிகளில் கைக்குழந்தைகளுடன் பெண்கள் மற்றும் சிறுவர்கள் ஊதுபத்தி விற்பனையில் ஈடுபட்டு வந்தனர்.

அதில் நல்லூர் பகுதியில் ஆலயத்துக்கு வருவோருக்கு ஊதுபத்தி விற்பனை என இடையூறு விளைவிக்கும் முகமாகச் சிலர் நடந்து கொண்டனர்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில் இவர்கள் வெளிமாவட்டங்களில் இருந்து குழுக்களாக வரவழைக்கப்பட்டு யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் தங்க வைக்கப்பட்டு, ஊதுபத்தி விற்பனையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர் என தெரியவந்துள்ளது.

இந்நிலையில் கடந்த புதன்கிழமை இரவு யாழ்ப்பாண பொலிஸார் குறித்த விடுதியை சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர்.

அதன்போது ஊதுபத்தி விற்பனைக்கு என அழைத்து வரப்பட்ட 03 பெண்கள், கைக் குழந்தை ஒன்று, 06 சிறுவர்கள், ஆண் ஒருவர் மற்றும் இவர்களை வேலைக்கு அமர்த்திய விடுதி உரிமையாளர் ஆகியோரை பொலிஸார் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் அவர்களை முற்படுத்தினர்.

அதனை அடுத்து நீதவான், விடுதி உரிமையாளர், ஆண் ஒருவர் மற்றும் 03 பெண்கள் ஆகியோரை எதிர்வரும் 09ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் தடுத்து வைக்க உத்தரவிட்டதுடன் , கைக்குழந்தையையும் தாயுடன் இருக்க அனுமதித்தார்.

அதேவேளை 06 சிறுவர்களையும் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களிடம் ஒப்படைக்க நீதிமன்றில் முற்படுத்தப்படும் வரையில் சிறைச்சாலை உத்தியோகஸ்தர்கள் கண்காணிப்பில் வைத்திருக்க நீதவான் உத்தரவிட்டார். (அ)

# வலி.மேற்கு பிரதேச சபை முன்றலில் அமிர்தலிங்கத்தின் பிறந்ததின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 27

நாடறிந்த தலைவரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 95ஆவது பிறந்தநாள் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் முன்றலில் அமைந்துள்ள அமிர்தலிங்கத்தின் திருவுருவச் சிலைக்கு முன்பாக நேற்றுக் காலை 8 மணியளவில் பண்ணாகம் அண்ணாகலைமன்றம் மற்றும் பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அமிர்தலிங்கத்தின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டதோடு பொது மக்களாலும் மலரஞ்சலி செலுத்தப்பட்டது.



95ஆவது பிறந்த தினத்தை நினைவுகூரும் முகமாக

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, முன்னாள் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆகியோரால் கேக் வெட்டப்பட்டு பரிமாறப்பட்டது.

இந்த நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், வலிமேற்கு பிரதேச சபையின் தவிசாளர் நடனேந்திரன், வலிமேற்கு பிரதேச சபையின் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள், பண்ணாகம் அண்ணா கலை மன்றத்தினர், பண்ணாகம் கிராம அபிவிருத்தி சங்கத்தினர், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சாபக்கேடான ஆட்சிக்கு இனி இடமளிக்கக்கூடாது

## சஜித் பிரேமதாஸ திட்டவட்ட அறிவிப்பு

கொழும்பு, ஓக. 27

**"ராஜபக்ஷ குடும்பத்தினர் வேண்டுமென்றே இனவாதத்தையும் மதவாதத்தையும் உருவாக்கி நாட்டை ஏழ்மைக்கு ஆளாக்கிக் கொள்கை ஒன்றும் இல்லாதவாறு செயற்பட்டனர். அவர்கள் இப்போதும் நாட்டின் அடுத்த ஆட்சியைத் தங்கள் மகன்கள் மற்றும் பேரப்பிள்ளைகளுக்கு வழங்கி நாட்டை அறுதியாக்கி ராஜபக்ஷ ஆட்சியின் கீழ் கொண்டுவரும் நோக்குடன் செயற்படுகின்றனர். இந்தச் சாபக்கேடான ஆட்சிக்கு இனியும் எவரும் இடமளிக்கக்கூடாது."**
**- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

களுத்துறை, வாத்துவ பொதுப்பிட்டிய பிரதேச மீனவ மக்களை நேற்று முன்தினம் சந்தித்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் கலந்துரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ராஜபக்ஷ குடும்பத்தின் சாபக்கேடான ஆட்சியில் கோடீஸ்வரர்களுக்கு பெரும் வரிச்சலுகைகளை வழங்கி விவசாயிகளின் விவசாய உரிமைகளை இழக்கச் செய்து, உழைக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை அழித்ததனால் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பரிதாபகரமான தலைவிதியை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி, வீரம், மனிதாபிமானம் என்ற பொய்யான வார்த்தைகளால் மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்று, தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி நாட்டையே அழித்தார். இதன் பின்னர் இரண்டரை வருடங்களின் பின்னர் இலங்கையின் 22 மில்லியன் மக்கள் நாட்டுக்கு மனித நேயம் கொண்ட மக்கள் பிரச்சினைகளை புரிந்துகொண்ட ஆட்சியொன்று தேவை எனக் கூறினாலும் தற்போதைய ஆட்சியாளர்கள் அவ்வாறான மக்கள் விருப்பத்தை வழங்கவில்லை.

போலியான வீரத்தை விட மனிதாபிமானத்தை தேர்ந்தெடுக்கும் காலம் வந்துள்ளது. தங்கி வாழும் மனநிலையை விட்டு வெளியேறி அனைவருக்கும் சிறந்ததான ஆட்சியொன்றைத் தெரிவு செய்ய வேண்டும். அதற்கு நானும் நான் சார்ந்தவர்களும் தயாராக இருக்கின்றோம்-என்றார். (அ)

# பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும் என்றே ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை பெற்றது இலங்கை

## சுட்டிக்காட்டுகின்றார் சுமந்திரன் எம்.பி.

கொழும்பு, ஓக. 27

"பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும் என்ற உத்தரவாதத்தை ஐரோப்பிய ஒன்றியத்துக்கு வழங்கியே ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை இலங்கை பெற்றுக்கொண்டது. அந்த உறுதிமொழி மீறப்பட்டுள்ளதால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் கடும் நெருக்கடிகளை இலங்கை சந்திக்க நேரிடும்."

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு நேற்று வழங்கிய நேர்காணலின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நல்லாட்சியில் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க,



பிரசல்ஸ் சென்று ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தியிருந்தார். இதன்போது பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும் என்ற உத்தரவாதமும் அது நீக்கப்படும் வரை அந்தச் சட்டம் பயன்படுத்தப்படமாட்டாது என்ற உறுதிமொழியும் வழங்கப்பட்டிருந்தது. இதையடுத்தே ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை இலங்கைக்குக் கிடைக்கப்பெற்றது.

எனினும், உறுதிமொழி தற்போது மீறப்பட்டுள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டம் பயன்படுத்தப்படுகின்றது. இதன் தாக்கம் ஜெனிவா தொடரில் எதிரொலிக்கும். போராட்டக்காரர்கள் வன்முறைகளில் ஈடுபட்டிருந்தால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு நாட்டில் உள்ள சாதாரண சட்டம் போதுமானது. வன்முறை என்பது தவறுதான். ஆனால், எல்லா வன்முறைகளும் பயங்கரவாத நடவடிக்கையாக அமையாது. குறிப்பாக தேர்தல் காலங்களில் அரசியல்வாதிகளின் அலுவலகங்கள் தாக்கப்படும். அது பயங்கரவாத நடவடிக்கையா?

போராட்டக்களத்தில் இருந்த முன்களப் போராளிகள் தற்போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி வேட்டையாடப்படு கின்றனர். இது தவறான அணுகுமுறையாகும். -என்றார். (அ)

# பயண ஆலோசனையை இரத்து செய்தது நோர்வே

கொழும்பு, ஓக. 27

இலங்கையின் பாதுகாப்பு நிலைமை தற்போது மிகவும் ஸ்திரமாக உள்ளதாக சுட்டிக்காட்டி முன்பு விதித்திருந்த பயண ஆலோசனையை நோர்வே அரசாங்கம் இரத்து செய்துள்ளது.

நாட்டின் பல பகுதிகளில் ஆர்ப்பாட்டங்கள், ஊரடங்கு உத்தரவு மற்றும் அவசரகால நிலை பிரகடனத்தை அடுத்து மே மாதம் பயண ஆலோசனை நோர்வே புதுப்பித்தது.

இந்நிலையில் இலங்கைக்கான பயண ஆலோசனையை இரத்து செய்துள்ள நோர்வே, பாதுகாப்பு நிலைமை ஓரளவு மேம்பட்டிருந்தாலும் எரிபொருள், மருந்து தட்டுப்பாடு நிலவுவதாகக் கூறியுள்ளது.

ஆகவே இலங்கைக்கு பயணிக்கத் திட்டமிடும் தமது நாட்டவர்களை தேவையான மருந்துகளை எடுத்துச் செல்லவும், போக்குவரத்து தொடர்பாக உறுதி செய்யுமாறும் கேட்டுக்கொண்டுள்ளது. (அ)













# நல்லூர் கந்தன் ஆலய தீர்த்தோற்சவம் நேற்று

யாழ்ப்பாணம், ஓக. 27

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் தீர்த்தோற்சவம் நேற்று இடம்பெற்றது.

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் ஓகஸ்ட் மாதம் இரண்டாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம் பமானது.

நல்லைக்கந்தனின் தீர்த்தோற்சவமான நேற்றுக் காலை விசேட பூசைகள் நடைபெற்று மூலஸ்தானத்தில் வேலாக வீற்றிருக்கும் வேலன், வள்ளி தெய்வானை சமேதரராக வலம் வந்தார்.

வெள்ளி எலி வாகனத்தில் பிள்ளையாரும், தங்க மயில் வாகனத்தில் முருகப்பெருமானும் வலம் வந்தனர். நாட்டின் பல பாகங்களிலி ருந்தும் வருகை தந்த பக்தர்கள் திரண்டு வழிபாடுகளில் ஈடுபட்டனர். (அ)



# பாஜகவிற்குள் நடக்கும் அதிகாரப் போட்டி கற்றுக் கொடுக்கும் பாடம்

**பா**ஜகவின் நாடாளுமன்ற குழு 17-08-2022 அன்று மாற்றியமைக்கப்பட்டிருக் கிறது. பாஜகட்சியின் சட்டங்களை மாற்றவும் திருத்தவும் அதிகாரம் கொண்ட இக்குழுவிற்கு மோடி, அமித் ஷாவிற்கு சாதகமானவர்கள் கொண்டு வரப்பட்டிருக் கிறார்கள். இதுமட்டுமல்ல, மோடி, அமித்ஷாவிற்கு போட்டியாளர்களாக கருதப்படுகிறவர்கள் இக்குழுவில் இணைக்கப்படவில்லை அல்லது அவர்கள் பொறுப்பு நீக்கப்படவில்லை. இக்குழுவே பாஜகவின் அதிகாரங்களை நிர்ணயிக்கும் உயர்மட்டக்குழு.

மாநில அளவிலான தேர்தல்களில் யாரை முதல்வராக முன்மொழிவு செய்வது, அல்லது முதல்வராக தேர்ந்தெடுப்பது, நாடாளுமன்றப் பணிகள், சட்டமன்ற முடிவுகளை கண்காணிப் பது இக்குழுவின் பணிகள். இதுமட்டு மல்ல, நாடாளுமன்றப் பதவிகளுக்கு ஆட்களைத் தேர்வு செய்வதும் இக் குழுவின் பணியாகும். ஏனெனில் இக்குழுவே பாஜகவின் மைய தேர்தல் கமிட்டியாகவும் செயல்படும். இதனால் இக்குழுவிற்கான நியமனம் என்பது பாஜகவில் முக்கியத்துவம் பெற்ற ஒன்று.

இப்படியான குழுவில் இடம்பெறக் கூடியவர் இந்திய நாடாளுமன்றத் தேர்தல், சட்டமன்றங்களின் தேர்தல்களில் ஆதிக்கம் செலுத்தக் கூடியவர்களாக இருப்பார்கள். இதுவரை இக்குழுவில் தேசிய அளவிலான பிரதிநிதிகள் உள்ளிட்ட பிராந்திய அளவிலான சமூக பிரதிநிதிகளாக கருதப்படுகிறவர்கள், மாநில முதல்வர்களாக இருக்கக் கூடியவர்கள் முன்னணி செயல்பாட்டாளர்கள் ஆகியோர் நியமனம் பெறுவார்கள். மேலும் 75 வயதிற்கு மேற்பட்டோர் இக்குழுவில் இடம் பெற மாட்டார்கள் என்கிற வழமையை இக்கட்சி வைத்திருந்தது.

இன்னும் இரண்டு வருடங்களில் தேசிய அளவிலான நாடாளுமன்றத் தேர்தல் 2024-இல் நிகழ இருக்கிறது. மேலும், ஒருவேளை பாஜக ஆட்சி அமைக்குமானால், அதன் கொள்கை



வரைவை செயல்படுத்தக்கூடிய நபர்களாக கருதப்படக் கூடியவர்கள் அமைச்சர்களாக, இதர பொறுப்பு மிக்க பணிகளில் நியமனம் பெறுவார்கள்.

இப்படியான குழுவில் பாஜகவில் அதிகாரம் பெற்றவர்களாகக் கருதப்படக் கூடியவர்கள் இடம்பெறுவார்கள் என எதிர்பார்க்கப்பட்ட பட்டியலில் பெரும்பாலோனோர் இடம்பெற வில்லை.

மோடிக்கு அடுத்தபடியாக இந்துத் துவவாதிகளால் கொண்டாடப்படுகிற உத்திரப் பிரதேசத்தின் முதல்வர் யோகி ஆதித்யநாத், இக்குழுவிற்குள் கொண்டுவரப்படக் கூடியவர் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அவரது பெயர் இடம் பெறவில்லை. மேலும் பாஜகவில் மோடி, அமித்ஷாவிற்கு இணையான அதிகாரம் கொண்டவராகக் கருதப்பட்ட நிதின் கட்கரி இக்குழுவில் இருந்து நீக்கம் செய்யப்பட்டிருக் கிறார்.

யோகி இரண்டாம் முறையாக முதல்வராக பெரும்பான்மையோடு தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில் பாஜகவில் செல்வாக்கு பெற்றவராக தேசிய அளவில் முன்னகர்வார் என எதிர்பார்க்கப்பட்டது. மேலும் மோடி இலவசங்களுக்கு எதிராக கடந்த வாரத்தில் பேசிய பொழுது அதற்கு

> இரண்டு வருடங்களில் தேசிய அளவிலான நாடாளுமன்றத் தேர்தல் 2024-இல் நிகழ இருக்கிறது. மேலும், ஒருவேளை பாஜக ஆட்சி அமைக்குமானால், அதன் கொள்கை வரைவை செயல் படுத்தக்கூடிய நபர்களாக கருதப் படக் கூடியவர்கள் அமைச் சர்களாக, இதர பொறுப்புமிக்க பணிகளில் நிய மனம் பெறுவார்கள்.

பதிலளிக்கும் விதமாக பெண்களுக்கு இலவச பேருந்து பயணத்திட்டத்தை யோகி அறிவித்தார்.

இந்த அறிவிப்பு வெளியானவுடன் சமூக வலைதளங்களில் மோடிக்கு எதிராக யோகி என்றும், பிரதமராக யோகி என்றும் செய்திகள் விரிவாக பகிரப்பட்டன. சமூக வலைதளத்தை ஆக்கிரமித்திருக்கும் பாஜகவின் இணைய அணிகளை மீறி இப் பிரச்சாரம் முன்னெடுக்கப்பட்டது.

மேலும் கட்சி சாராத சங்கிகளாக செயல்படுபவர்கள், நபிகளை கொச்சைப்படுத்தி பேசிய நுபுர் சர்மாவை பொறுப்பிலிருந்து நீக்கிய செயலைக் கண்டித்தும், யோகியே முழுமையான இந்துத்துவவாதி என்றும் செய்திகள் வெகுவேகமாக பகிரப்பட்டன. இந்த போக்குகள் பாஜகவிற்குள் நிகழும் அதிகாரப் போட்டியை அம்பலப்படுத்தியது.

யோகியை தீவிரவாத இந்துத்துவ சந்நியாசியாக சங்கிக்கூட்டம் கொண்டாடுகிறது. அத்வானி-வாஜ்பாய் அதிகாரத்திற்கு வந்தபின்னர் தம்மை மிதவாதப் போக்குடையவராக, சன நாயகவாதியாக காக்க முயன்றதை தற்போது மோடியும் செய்ய முனை கிறார். அத்வானியின் தீவிரவாத பிம் பத்தை மாநில அளவில் மோடி கையாண்டு தேசிய அரசியலுக்குள் நுழைந்தார். இதே தந்திரத்தை தற் போது யோகியும் கையாண்டு தம்மை தீவிரவாத இந்துத்துவ கும்பல்களின் ஆதரவை வென்றெடுத்தது, தேசிய அரசியலுக்குள் நுழைவதற்குரிய சாவியாக பயன்படுத்துகிறார்.

யோகியினால் உருவான இந்த சவாலைக் கையாளவே லக்னோவில் அமித்ஷா தனக்கு மிக நெருக்கமான சுனில் பன்சால் எனும் ஆர்.எஸ்.எஸ். நபரை அமர்த்தினார். இவருக்கும் யோகி ஆதித்யநாத்திற்குமான பகை அனைவரும் அறிந்த ரகசியமாக இருந்த போதிலும், யோகியின் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இவரை சந்திக்குமளவிற்கு வலிமை மிக்கவராக விளங்கியதற்கு அடிப்படைக் காரணம் மோடி-அமித்ஷாவின் ஆதரவு.

இதனாலேயே அயோத்தியில் ராமர் கோவில் கட்டும் துவக்க நிகழ்வில் அமித்ஷா அழைக்கப்படாமல் தவிர்க்கப்பட்டார். இந்துத்துவக் கும்பல்களின் மிக நீண்ட நாள் கனவான இந்த நிகழ்வில் தீவிர இந்துத்துவவாதியான அமித்ஷாவை யோகி தவிர்த்தார். இந்நிகழ்வில் ஆர்.எஸ்.எஸ்சின் தலைவர் மோகன்பகவத்தும், மோடியும் மட்டுமே அழைக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு இரண்டு அதிகார துரு வங்கள் பாஜகவின் கோட்டையான இந்தி பேசும் மாநிலங்களில் உருவா கியது.

இந்த சுனில் பன்சால் தற்போது டில்லிக்கு திரும்ப அழைக்கப்பட்டிருக்கிறார். இது கடந்த வாரம் நடந்தேறியது. இந்நிலையில் யோகி நாடாளுமன்றக் குழுவிற்குள் அனுமதிக்கப்படாமல் நிராகரிக்கப்பட்டிருக்கிறார். இதே போன்றதொரு முக்கியத்துவம் வாய்ந்த தலைவர்களில் ஆர்.எஸ்.எஸ்.சினால் நெருக்கமானவராக கருதப்படும் நிதின் கட்கரியும் தவிர்க்கப்பட்டிருக்கிறார். இதற்கு பதிலாக மராத்தியத்தின் பட்னாவிஸ் இணைக்கப்பட்டி ருக்கிறார்.



ராஜ்நாத்சிங் இக்குழுவில் தொடர அனுமதிக்கப்பட்டிருந்தாலும், மத்திய பிரதேசத்தின் முதல்வர் சிவ்ராஜ்சிங் சவுகான் நிராகரிக்கப்பட்டிருக்கிறார்.

சிவராஜ்சிங் சவுகான் கடந்த 20 ஆண்டுகளாக மத்தியப் பிரதேசத்தின் முதல்வராக இருக்கிறவர். இவரும் பிரதமர் வேட்பாளாராகப் போட்டியிடும் தகுதி படைத்த வராக இந்துத்துவ அமைப்புகள் கருதுகின்றன.

(09 ஆம் பக்கம் பார்க்க...)

# அளவையூர் சிதம்பரநாதன்!

# நாதஸ்வர துறையில் ஓர் அற்புதக் கலைஞர்!!

**வைத்திய கலாநிதி**
**சிவப்பிரகாசம் அனுஷ்யந்தன்**

யாழ்ப்பாணத்தின் வடக்கு நகராம் அளவையூரில் பிறந்து, நாதஸ்வர இசையை உலகத்தின் மூலை முடுக்கெல்லாம் கொண்டு சென்ற அற்புதக் கலைஞன் மறைந்து இன்றோடு ஒரு வருடமாகின்றது.

தமிழர் கலைகளில் உன்னதமான இடத்தில் வைத்து மதிக்கப்படுவது மங்கள இசைக் கலையாகும். தமிழர்களுடைய சகல பாரம்பரிய நடவடிக்கைகளோடும் நாதஸ்வரக் கலை பின்னிப் பிணைந்து இருக்கின்து என்றால் அது மிகையாகாது.

நாதஸ்வர, தவில் ஓசையின்றி எமது ஆலய உற்சவங்களோ பண்பாட்டு சடங்குகளோ, பொது நிகழ்வுகளோ நடைபெறுவதில்லை கேட்போரை பக்தி மயமாக்கி உற்சாகப்படுத்தி, துன்பம் மறந்து இன்பத்தை அளிக்கும் அற்புத சக்தி வாய்ந்த இசையாக இம் மங்கள இசை விளங்கி வருகின்றது.

இக்கலையானது இன்றும் குருகுல முறைப்படி கற்பிக்கப்படுவதால் அதன் ஆற்றுகைத் தரமும் கலைஞர்களின் மதிப்பும் உயர்வானதாகவே இருக்கின்றது. இந்த வகையில் பல நாதஸ்வர கலைஞர்களை உருவாக்கிய ஆசானாகவும் இராகம் வாசிக்கும் முறையில் தனித்துவமான பாணியைக் கொண்ட நாதஸ்வரக் கலைஞராகவும் ஈழத்தில் மட்டுமல்லாமல் உலக நாடுகள் பலவற்றுக்கும் சென்று நாதமழை பொழிந்த மூத்த கலைஞராகவும் கடந்த பல தசாப்தங்களாகக் கலைப்பணியாற்றி வந்தவர், மதுரகான நாதஸ்வரமணி. செ. சிதம்பரநாதன் அவர்கள்.

ஈழ தேசத்தில் பல கலைஞர்களையும் கவிஞர்களையும் தன்னகத்தே கொண்ட அளவெட்டி (யாழ்ப்பாணம்) என்னும் கிராமத்தில் தவளக்கிரி முத்துமாரி அம்மன் அருளோடும் ஆசியோடும் தவில் வித்துவான். செல்லத்துரை, அன்னம்மா தம்பதியரின் மகனாக *16.05.1944* இல் அவதரித்தார்.

இவரது சகோதரர்களான, வேணுகோபால், நீலாயதாட்சி, மனோன்மணி, சிவகுருநாதன் ஆகியோருடன் களிப்பான இளமைப்பருவம் கண்டார்.

வித்தியா தானத்தில் சிறந்த ஞானோதயா வித்தியா சாலையில் கல்விப் பயன் அடைந்தார். அதனைத் தொடர்ந்து அவரது தாய்மாமனாகிய தவில் வித்துவான், பெரிய கணேசுவின் மங்கள இசைக்குழுவில், தாளம் போடும் சிறுவனாகத் தனது இசைப்பணியை ஆரம்பித்தார். அத்தோடு நாதஸ்வரக் கலைஞர்களான திரு.பசுபதி, திரு. சுப்பையா இரத்தினவேல் பிள்ளை ஆகியோரிடம் நாதஸ்வரம் பயில ஆரம்பித்தார்.

அதன் பின்னர், மாவிட்டபுரம் நாதஸ்வரக் கலைஞர். திரு. எஸ்.கே. ராசாவிடமும் இரண்டு ஆண்டுகள் பயின்றதோடு அவருடன் இணைந்து மேடைக்கச்சேரிகளில் தனது திறமையைக் காண்பித்தும் வந்தார். இவரது தந்தையார், தவில் வித்துவான் ஆகவும், பேரன். திரு சோமாஸ்கந்தர், நாதஸ்வரக் கலைஞராகவும் இருந்தமை இவரது இசைப்பயிற்சியையும் ஈடுபாட்டையும் அதிகமாக்கி மிகவேகமான வளர்ச்சி கண்டு, தனது தாய்மாமன் பெரிய கணேசுவின் ஆதரவுடன் பன்னிரண்டாவது வயதிலேயே, ஆலய உற்சவங்களில் நாதஸ்வரத்தை வாசிக்க ஆரம்பித்து விட்டார்.

*1968*இல் இருந்து, தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் தமிழகம் சென்று, திருச்சேரை. கிருஷ்ணமூர்த்தி பிள்ளையிடம் ஒவ்வொரு ஆண்டிலும் மூன்று மாதகாலம் தங்கியிருந்து நாதஸ்வரக் கலையின் நுட்பங்களைக் கற்றதுடன் அங்கும் பல இடங்களில் இசைக் கச்சேரிகளை வழங்கி நிறைவான கலைஞராய்த் தாயகம் திரும்பினார்.

அந்தக் காலத்தில், தமிழகத்திலிருந்து ஈழத்துக்கு வந்து மங்கள இசை வழங்கிக் கொண்டிருந்த நாதஸ்வரக் கலைஞர், ஆம்பல், இராமச்சந்திரனுடன் ஆறுமாத காலம் இணைந்து வாசித்துப் பெரும் புகழடைந்தார். பின்னர் மீண்டும் இவர் தவில் வித்துவான், திரு. பெரிய கணேசு குழுவில் இணை நாதஸ்வரக் கலைஞராகவும், பிரதான கலைஞராகவும் பல ஆண்டுகள் சேவையாற்றியதுடன் தனது சகோதரனும் நாதஸ்வரக் கலைஞருமாகிய திரு.எஸ். சிவகுருநாதனுடன் இணைந்து, சோடி நாதஸ்வரக் குழுவாக எட்டு ஆண்டுகள் இசைப் பணி புரிந்தார்.

*1973* இல், தனது தாய்மாமன். முதுபெரும் தவில் வித்துவான், பெரிய கணேசுவின் மகளான ஜெகதீஸ்வரியை திருமணம் செய்து இல்லறத்தில் இனிதே இணைந்தார். அதனைத் தொடர்ந்து தனியாகக் குழு அமைத்து, இசையோடு வாழ்ந்து வந்த இக்கலைஞர் ஈழத்தின் அனைத்து பகுதிகளுக்கும் அழைக்கப்பட்ட ஒருவராக மட்டுமல்லாமல் கனடா, பிரித்தானியா, சுவிற்சலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ், தென்னாபிரிக்கா, ஆஸ்திரேலியா,சிங்கப்பூர், மலேசியா, டென்மார்க், நோர்வே, இந்தியா, போன்ற நாடுகளுக்கும் அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டு போற்றப்பட்ட சிறந்த கலைஞராகக் காணப்பட்டார்.

மரபுவழி தவறாத இராக ஆலாபனையும், பாடாந்தரம் மாறாத உருப்படி அமைப்பும், கச்சிதமான தாளக் கணக்கு வழக்கும், சுருதியுடன் கூடிய இனிமையான வாசிப்பும் இவரது தனித்துவப் பண்புகளாக மிளிர்ந்து நிற்பதைக் கச்சேரிகளில் காணலாம். ஈழத்தின் இத்துறைசார்ந்த அனைத்துக் கலைஞர்களுடனும் இணைந்து ஆயிரக் கணக்கான மேடைகளில் இசைமணம் பரப்பிய இவர் பல வளர்ந்துவரும் நாதஸ்வரக் கலைஞர்களை உருவாக்கிய ஆசானாகவும் திகழ்ந்துள்ளார்.

இவரது நெடுதூர இசைப் பயணத்தில் ஈழத்தில் கலாபூஷணம், கலைமாமணி, மதுரகான நாதஸ்வரமணி (சுவிற்சலாந்து), எழில் இசை வேந்தன், நாதகானசுரபி, நாதஸ்வர இசைத்திலகம், நாதஸ்வர மாமேதை. நாதகலாமணி (லண்டன்), நாதஸ்வர இசைத்தென்றல் (சுவிற்சலாந்து), சுரஞானரத்தினம் போன்ற பல பட்டங்களையும் விருதுகளையும் தங்கப் பதக்கங்கள் பலவற்றையும் பெற்று ரசிகர்களின் பாராட்டுக்களைப் பெற்றார்.

முருகேசு சுவாமிகள், முன்பு ஒருமுறை இவரின் சிறந்த ஆற்றலையும் சங்கீத ஞானத்தையும் புகழ்ந்து பாராட்டியுள்ளார். குன்னக்குடி அடிகளார் முன்பு இலங்கை வந்த போது ஒரு கலைஞனில் காணப்படக்கூடிய முக்கிய குணங்களான பணிவுடமையும், இன்சொல்லும் சிதம்பரநாதனுக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட பாக்கியம் என்று கூறி அவரைப் பெருமைப் படுத்தினார்.

அவருடைய இந்த திதி நாளிலே, அன்னாருடைய ஆன்மா சாந்தியடையப் பிராத்திப்போமாக!




# பாஜகவிற்குள் நடக்கும் அதிகாரப் போட்டி ...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆனால் இவரும் தடை செய்யப்பட்டிருப்பது ஒட்டுமொத்த இந்தி மாநிலங்களின் முதல்வர்கள் நாடாளுமன்றக் குழுவில் இடம்பெறாமல் தவிர்க்கப் பட்டிருக்கின்றனர். கர்நாடகவின் எட்டியூரப்பா இக்குழுவிற்குள் கொண்டு வரப்பட்டிருக்கிறார்.

பட்னாவிஸ், எட்டியூரப்பாவின் இணைப்பு இங்கு வர இருக்கும் மாநில தேர்தல்களை கணக்கில் கொண்டிருக்கிறது. இக்குழுவில் இணைக்கப்பட்டிருக்கும் முன்னாள் அசாம் முதல்வர் உட்பட அனைவருமே மோடி-அமித்ஷாவின் அதிகார பீடத்தை வணங்கி ஏற்கக் கூடிய வர்கள்.

பாஜகவின் ஒட்டுமொத்த அதிகா ரத்தையும் தமது கைகளுக்குள் மோடிக்கு துணையாக இருப் பது அவரது மக்கள் ஆதரவு என பிரச்சாரம் மேற்கொள்ளப் படுகிறது. இது உண்மையல்ல. அவருக்குப் பின்புலமாக இயங்கும் குஜராத்திமார் வாடிகளின் வணிக நலன்களே அவரைப் பலம் வாய்ந்தவ ராக்குகிறது.

குஜராத்தி மார்வாடிகளுக்கான பொருளாதார நலனை கொண்டு வரக்கூடிய மோடி-அமித்ஷா எனும் இரட்டையரை இந்த பெருமுதலாளிகள் எக்காலத்திலும் இழக்க விரும்பமாட்டார்கள். இந்த வணிகக் கூட்டங்களே இந்தியாவின் சுதந்திரப் போராட்ட காலத்தில் காங்கிரஸை இயக்கியது. இவர்களே ஆர்.எஸ்.எஸ். - இந்துமகாசபை வளர உதவியது. இவர்களின் நிதியுதவியைக் கொண்டே இந்தியா முழுவதும் இக்கும்பல்கள் தம்மை விரிவு படுத்திக் கொண்டன. இந்தக் கும்பல்களே மார்வாடிகள் இந்தியா முழுவதும் தமது வணிகத்தை விரிவுபடுத்த உழைக்கின்றன.

இன்றைய இந்தியாவின் அரசியல் அதிகாரம் மோடி-அமித்ஷாக்களின் கைகளில் இருக்கிறது என்பதைவிட அம்பானி, அதானி, பிர்லா, அனில் அகர்வால், டாடா போன்றவர்களே முடிவு செய்கிறார்கள் என்பதையே இக்குழு உருவாக்கத்தின் பின்னனி அரசியல். இக்குழுக்கள் யோகி ஆதித்த நாத்தையோ, சிவராஜ் சவுகானையோ, பசவராஜ் பொம்மையையோ ஆதரிக்கக் கூடியவர்கள் அல்ல என்பதா லேயே இக்கும்பல்கள் அதிகாரமிழந்து போகின்றன.

குஜராத்திகளின் கைகளிலேயே இந்தியாவின் அதிகாரம் மையம் கொண்டிக்கிறது என்பதையே இக்குழு உருவாக்கம் தெள்ளத் தெளிவாக்கு கிறது. இந்த வணிகக் குழுக்கள் நாளை காங்கிரஸ் தமக்கான கட்சியாக கருது வார்களேயானால் அவர்களை ஆட் சிக்கு கொண்டுவரத் தயங்க மாட்டார்கள்.

இந்த முதலாளி களின் ஆதரவான கட்சிகள் இந்த அடிப்படையிலேயே அதிகாரத்தை வெல்வதும் வெளியேற்றப்படுவதுமாக இருக்கின்றன எனும் உண்மையே இந்தியாவின் சனநாயகத் தேர்தலின் வரலாறு.

**- மே பதினேமு இயக்கம்**

ஈழநாடு



# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்


- **1, 2 ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்ட பகுதியைப் பூரணப்படுத்துவதற்குரிய மீதிப்பகுதியைத் தெரிவு செய்க.**

01. வண்ணத்துப்பூச்சியின் ஒருபகுதி முன்னே தரப்பட்டுள்ளது.




(1) (2) (3)

02.



(1) (2) (3)

03. இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.



A B C D E F

இக் கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) A, C / D, E / B, F

(2) A, E / B, C / D, F

(3) C, F / B, D / A, E

04. **"பல்கலைக்கழகம்"** எனும் சொல்லிலுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய சொற்களைக் கொண்ட விடைத் தொகுதி எது?

(1) பல், பழம், பகல், கழகம், காலை, கல், பாகல்

(2) பல், கல்வி, பகல், கழகம், கலை, கல், பக்கம்

(3) பல், பழம், பகல், கழகம், கலை, கல், பக்கம்


05. சந்திரன் தோன்றாத ஒரு நாளில் நள்ளிரவில் வீட்டிலிருந்து வெளியே வந்து வானத்தைப் பார்க்கும்போது தொலைவில் உள்ள வானில் பறந்து செல்லும் கிளிக் கூட்டத்தைக் காணலாம் எனக் காவியா கூறுகின்றாள். இது நடைபெற இயலாது இதற்குக் காரணம்

(1) இருளில் அத்தகைய ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க முடியாமை.

(2) இரவில் கிளிகள் பறந்து செல்ல வேண்டிய தேவை இல்லை.

(3) கிளிகள் கூட்டமாகப் பறந்து செல்லாமை.

06. உருக்கோலத்தில் அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிக.



(1) (2) (3)

07. உலக மரபுரிமை மையங்களாக ........................ நிறுவனத்தால் இலங்கையில் பாரம்பரிய இடங்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டன. அவற்றுள் பொலன்னறுவை புராதன நகரம், அனுராதபுரம் புனிதநகரம், சிகிரியா புராதன நகரம், .............................. போன்றவை சில இடங்களாகும்.

முதலாம் வெற்றிடத்திற்கும் இரண்டாம் வெற்றிடத்திற்கும் முறையே மிகப் பொருத்தமான சோடிச் சொற்களை தெரிவு செய்க.

(1) யுனிசெப், காலிக்கோட்டை

(2) யுனேஸ்கோ, யாழ்கோட்டை


(3) யுனெஸ்கோ, தங்கக்கோயில் (கோல்டன் டெம்பிள்)

## விடைகள்

01. (3)



02. (1)



03. (3) C, F / B, D / A, E

---

**27.08.2022**
**சனிக்கிழமை**

CHANNEL-1

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

CHANNEL - 2

**27.08.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# புதிய முயற்சியாளர்களுக்கான சமுர்த்தி கடன் வழங்கும் நிகழ்வு




அம்பாறை, ஓக. 27

புதிய முயற்சியா ளர்களுக்கான திட்ட கடன் வழங்கும் நிகழ்வு காரைதீவு சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ். சதீஷ் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

நாட்டில் நிலவும் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அம்பாறை மாவட்டம் காரைதீவு சமூர்த்தி வங்கியினால் அரசாங்கத்தின் பொருளாதார கொள்கையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் சமூர்த்தி திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு 20 லட்சம் ரூபாய் காசோலைகளை தெரிவு செய்யப்பட்ட சமுர்த்தி பயனாளர்களுக்கு வழங்கினார்.

காரைதீவு பிரதேச செயலக சமூர்தி தலைமை பீட முகாமையாளர் ஏ.எச். அச்சு முகம்மது,முகாமைத்துவ பணிப்பாளர் எம். மதியழகன் ,சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம்.பஹ்மி ஆகியோர் இதில் கலந்துகொண்டனர் .

மேலும் இதன்போது காரைதீவு பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன், காரைதீவு பிரதேச சமுர்த்தி அதிகாரிகள் புதிய தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக வியாபார நிலையங்களுக்கு நேரடியாக சென்று பார்வையிட்டதுடன் தேவையான ஆலோசனைகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# நிந்தவூரில் கடல் அரிப்பை தடுக்க உடனடியாக 20 மில்லியன் ரூபாய்!

## பைசல் காசிம் எம்.பி. தெரிவிப்பு

அம்பாறை, ஓக. 27

**அம்பாறை மாவட்டத்தில் நிந்தவூர் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடல் அரிப்பை தடுக்கும் நடவடிக்கையாக முதல் கட்ட நடவடிக்கையாக உடனடியாக 20 மில்லியன் ரூபாயை ஜனாதிபதி ஒதுக்கீடு செய்துள்ளதாக அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம் தெரிவித்துள்ளார்.**



ஜனாதிபதியின் செயலாளர் சமன் எக்கநாயக்கவை நேற்று முன் தினம் வியாழக்கிழமை சந்தித்து கலந்துரையாடிய பின் இந்த ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது என அவர் கூறினார்.

அத்துடன் கரையோர பாதுகாப்புத் திணைக்களம், துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து அமைச்சின் செயலாளர், துறைமுக அதிகார சபை ஆகியவற்றுக்கு ஜனாதிபதியின் செயலாளர் அவசர பணிப்புரைகளை விடுத்து நடவடிக்கை எடுக்குமாறு கூறினார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவசர தடுப்பு நடவடிக்கையாக, ஒலுவில் துறைமுகத்தினுள் இருக்கின்ற கற்பாறைகளை விடுவித்து நிந்தவூர் பிரதேச கரையோரங்களுக்கு போடுமாறு துறைமுக அதிகார சபைக்கு துறைமுக அதிகார சபையின் தலைவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

துறைமுக அதிகார சபையின் தலைவர் கயான் அழுகவர்த்தயுடன், பைசல் காசிம் எம்.பி. நடத்திய பேச்சு வார்த்தையை அடுத்து உடனடி நடவடிக்கையாக இது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நிந்தவூர் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடல் அரிப்பு பாரிய பிரச்னையாக உருவெடுத்து இருக்கின்ற நிலையில், பைசல் காசிம் இது சார்ந்த அமைச்சின் செயலா ளர்கள், திணைக்களத் தலைவர்களுடன் பல சுற்று பேச்சுவார்த்தைகளை நடத்தினார்.

இதன் மூலமே, முதல்கட்ட பணிகளாக 20 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதே நேரம், ஒலுவில் துறைமுகத்துக்குள் இருக்கும் கற்பாறைகளை விடுவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# அம்பாறையில் பெற்றோலை பெற மீண்டும் முண்டியடித்தனர் மக்கள்



அம்பாறை, ஓக. 27

மீண்டும் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு மக்கள் முண்டியடிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை சாய்ந்தமருது மருதமுனை உள்ளிட்ட பகுதிகளில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இரவு முதல் பெற்றோல் பெறுவதற்கு மக்கள் எரிபொருள் நிலையங்களில் கூடியிருந்ததை காண முடிந்தது.

கடந்த காலங்களில் கியூ.ஆர் முறைமையினால் சீராக மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் விநியோகம் திடிரென இவ்வாறு நெருக்கடிக்குள்ளானமை மக்கள் மத்தியில் சிறு பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் மக்கள் எரிபொருள் நிலையத்தை சூழச் ஒன்றுகூடி நின்றதையும் அதிகளவான வாகனங்கள் எரிபொருள் நிலையங்களை நாடிச் சென்றதையும் கா முடிந்தது.

நாடளாவிய ரீதியில் மீண்டும் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பின் சகவாழ்வைக் கட்டியெழுப்பும் நிகழ்வு



அம்பாறை, ஓக. 27

இறக்காமம் பிரதேசத்திற்கான பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பின் உறுப்பினர்களுடனான சகவாழ்வு அமர்வு இறக்கமாம் உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நஸீல் தலைமையில் இறக்காமம் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

பெண்கள் வெளிக்கள உத்தியோகத்தர் ஆர்.எஸ். றிஸ்மியா ஜஹான், அமைப்பின் பிரதேச ஒருங்கினைப்பாளர் எஸ்.டீ. நஜீமியா ஆகியோரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகளான திட்ட இணைப்பாளர் நடராஜா சுமதி மற்றும் உதவித் திட்ட இணைப்பாளர் செல்பவதி கங்கேஷ்வரி ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவு, வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பிரிவு உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# மட்டக்களப்பில் வியாழன் முதல் மண்ணெண்ணெய் விநியோகம்



மட்டக்களப்பு, ஓக. 27

மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்ணெண்ணெய் தட்டுப்பாடு கடந்த இரண்டு மாதங்களாக காணப்பட்டுவந்த நிலையில், நேற்று முன் தினம் முதல் ஆரையம் பதி பலநோக்கு கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது.

பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட ஒரு குடும்ப அட்டைக்கு 1000 ரூபாவுக்கும், மீனவர் சங்கத்தின் சிபாரிசுடன் வரும் மீனவர்களுக்கு 20 லீற்றர் மண்ணெண்ணெயும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

குறித்த எரிபொருள் நிலையத் திற்கு கிடைக்கப்பெற்றுள்ள 13200 லீற்றர் மண்ணெண்ணெய் இரண்டாவது நாளாக நேற்று முன் தினம் மக்களுக்காக விநியோகிக்கப்பட்டதுடன், பூநொச்சிமுனை, பால முனை மற்றும் கிரான்குளம் போன்ற பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களுக்கும் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டுள்ளது. (அ)

# மட்டக்களப்பில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



மட்டக்களப்பு, ஓக. 27

இணைந்த கரங்கள் அமைப்பினால் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் கஷ்ட பிரதேச பாடசாலையான பொண்டுகள்சேனை கணபதி வித்தியாலத்தை சேர்ந்த தரம் 1 தொடக்கம் தரம் 8 வரையான 57 மாணவர்களுக்கும் மற்றும் முறக்கொட்டான் சேனை இராமகிருஸ்ன மிசன் வித்தியாலய தரம் ஒன்று தொடக்கம் தரம் 11 வரையான 88 மாணவர்களுக்கும் நேற்று முன் தினம் வியாழக்கிழமை குறித்த கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இக்கற்றல் உபகரணங்களை இணைந்த கரங்களின் மாவட்ட அமைப்பாளர்களான லோ.கஜரூபன் , கண்ணன் , சங்கீத், டெரித், ரிஸ்வான் ஆகியோர் இணைந்து வழங்கினர்.

இதன்போது சுமார் 145 மாணவ மாணவிகளுக்கு மூன்று இலட்சம் ரூபா பெறுமதியுடைய கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

(அ)

*சீனாவின் அச்சுறுத்தலுக்கு மத்தியில்*

# பாதுகாப்புச் செலவை உயர்த்திய தாய்வான்!

தாய்பேய், ஓக. 27

ஜனநாயக ரீதியில் ஆளப்படும் தீவைச் சுற்றி சீனா முன்னோடியில்லாத இராணுவப் பயிற்சிகளை நடத்திய சில வாரங்களுக்குப் பிறகு, தாய்வான் பாதுகாப்புச் செலவில் சாதனை அதிகரிப்புக்கான திட்டங்களை வெளியிட்டுள்ளது.

புதிய போர் விமானங்கள் மற்றும் பிற உபகரணங்களுக்கான நிதியுதவியை உள்ளடக்கிய 13.9 சதவீத செலவு அதிகரிப்பு, மொத்த பாதுகாப்பு வரவுசெலவுத் திட்டத்தை 586.3 பில்லியன் புதிய தாய்வான் டொலர்களாக (19.41 பில்லியன் அமெரிக்க டொலர்கள்) அல்லது மொத்த அரசாங்க செலவில் 15 சதவீதத்திற்கு கொண்டு செல்கின்றது.

ஜனாதிபதி சாய் இங்-வெனின் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டம், பாராளுமன்ற ஒப்புதலுக்கு உட்பட்டது.

சமீபத்திய ஆண்டுகளில் 4-5 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் செலவினங்களில் கூர்மையான உயர்வை இது குறிக்கிறது.

'அழுத்தம் அல்லது அச்சுறுத்தல்கள் காரணமாக சர்வதேச சமூகத்தின் பொறுப்பான உறுப்பினராக, தாய்வான் பிரச்னைகளைத் தூண்டாது அல்லது மோதல்களை அதிகரிக்காது' என ஜனாதிபதி சாய் இங்-வென் கூறினார்.

தாய்வான் கடந்த ஆண்டு 2026ஆம் ஆண்டிற்குள் 8.69 பில்லியன் டொலர்களை அதன் வருடாந்திர பாதுகாப்பு வரவு-செலவுத் திட்டத்தில், தீவின் கடற்படை திறன்களை உயர்த்தும் வகையில் செலவழிக்கத் திட்டமிட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் சீனா பாதுகாப்புக்காக 1.45 டிரில்லியன் யுவான் (211.62 பில்லியன் அமெரிக்க டொலர்கள்) செலவழிக்கும் திட்டங்களை அறிவித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ரஷ்ய இராணுவத்தினரின் எண்ணிக்கை அதிகரிப்பு!

*புடினின் உத்தரவு படி ஆட்சேர்ப்பு தீவிரம்*

மொஸ்கோ, ஓக. 27

**ரஷ்ய படையினரின் எண்ணிக்கையை அதிகரிக்கும் உத்தரவில் ஜனாதிபதி புடின் கையெழுத்திட்டுள்ளார். இந்த உத்தரவின்படி வரும் மாதங்களில் ரஷ்ய ஆயுதப் படைகளில் சுமார் 137,000 பேர் வரை இணைந்துக் கொள்ளப்படவுள்ளனர்.**



தற்போது ரஷ்யாவில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான படையினர் மற்றும் கிட்டத்தட்ட 900,000 சிவில் பாதுகாப்பு பணியாளர்கள் மட்டுமே உள்ளனர்.

இந்நிலையில் ரஷ்ய இராணுவத்தில் இணைவோருக்கு பெரும் சலுகைகள் அறிவிக்கப்பட்டு ஆட்சேர்ப்பு இடம்பெற்று வருகிறது.

ஆறு மாதங்களுக்கு உக்ரைன் மீதான ஆக்கிரமிப்பு போரை ரஷ்யா ஆரம்பித்ததில் இருந்து 70,000 முதல் 80,000 துருப்புக்கள் கொல்லப்பட்டு மற்றும் காயமடைந்துள்ளனர் என மேற்குலக நாடுகளின் அதிகாரிகள் கூறுகின்றனர்.

ஆட்சேர்ப்பு செய்பவர்கள் சிறைச்சாலைகளுக்குச் சென்று படையில் சேரும் கைதிகளுக்கு விடுதலை மற்றும் பண சலுகைகளை அறிவித்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன், தன்னார்வ பாதுகாப்புப் பணியாளர்களை நிரந்தரமாக இராணுவத்தில் உள்வாங்கவும் வாய்ப்புள்ளதாக இங்கிலாந்து பாதுகாப்பு அமைச்சகம் இரண்டு வாரங்களுக்கு முன்பு விடுத்த ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கடந்த பெப்ரவரியில் உக்ரைன் மீதான ஆக்கிரமிப்பு போரை ரஷ்யா தொடங்கியது. உக்ரைனை தாக்கி கைப்பற்ற குறுகிய கால இலக்கை ரஷ்யா நிர்ணயித்தது. எனினும் கடுமையான உக்ரேனிய எதிர்ப்பு காரணமாக ரஷ்யாவால் எதிர்பார்த்த வெற்றிகளைப் பெற முடியவில்லை. ரஷ்யப் படைகளின் முன்னேற்றம் முன்னரங்குகளில் மிக மெதுவாகவே உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# உலகில் முதல்முறையாக ஹைட்ரஜனில் செயல்படும் ரயில் சேவை ஜேர்மனியில்!

பேர்ளின், ஓக. 27

உலகிலேயே முதல்முறையாக ஹைட்ரஜனை எரிபொருளாகக் கொண்டு இயங்கும் இரயில்களின் சேவை ஜேர்மனியில் கடந்த புதன்கிழமை தொடங்கப்பட்டது.

லோயர் சாக்ஸோனி மாகாணத்துக்கு வழங்கப்பட்டுள்ள 14 ஹைட்ரஜன் ரயில்கள் மூலம், 4 நகரங்களை இணைக்கும் 100 கி.மீ. ரயில் பாதையில் இந்த சேவை வழங்கப்படுகிறது.

பிரெஞ்சு நிறுவனமான அல்ஸ்டோம் தயாரித்த ரயில்கள், குக்ஸ் ஹவன், ப்ரெமர்ஹேவன், ப்ரெமர் வோர்டே மற்றும் பக்ஸ்டெஹூட் ஆகிய வடக்கு நகரங்களுக்கு இடையே யான வழித்தடங்களில் பிராந்திய ரயில் நிறுவனமான எல்.என்.வி.ஜி.ஆல் இயக்கப்படுகிறது.

இதுவரை பயன்படுத்தப்பட்ட டீசல் இரயில்களுக்கு மாற்றாக, புவியை வெப்பமாக்கும் வாயுக்களை முற்றிலும் வெளியிடாத ஹைட்ரஜன் ரயில்கள் இயக்கப்படவுள்ளன.

9.3 கோடி யூரோக்கள் செலவில் தொடங்கப்பட்டுள்ள இந்த இரயில் திட்டத்தால் ஆண்டுக்கு 4,400 டன் கரியமில வாயு காற்றில் கலப்பது தடுக்கப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கோரடியா ஐலின்ட் ரயில்கள் 1,000 கிலோமீற்றர்கள் (621 மைல்கள்) மற்றும் அதிகபட்ச வேகம் மணிக்கு 140 கி.மீ. வரை இருக்கும் என்று அல்ஸ்டோம் கூறுகிறது. புதுப்பிக்கத்தக்க ஆற்றலுடன் உற்பத்தி செய்யப்படும் ஹைட்ரஜனைப் பயன்படுத்துவதன் மூலம் ரயில்கள் ஆண்டுக்கு 1.6 மில்லியன் லீற்றர் (422,000 கலன்களுக்கு மேல்) டீசல் எரிபொருளைச் சேமிக்கும்.

ஹைட்ரஜன் தற்போது வேதியியல் செயல்முறைகளில் ஒரு துணைப் பொருளாக உற்பத்தி செய்யப்படுகிறது, ஆனால் ஜேர்மன் சிறப்பு எரிவாயு நிறுவனமான லிண்டே மூன்று ஆண்டுகளுக்குள் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை மட்டுமே பயன்படுத்தி உள்நாட்டில் தயாரிக்க திட்டமிட்டுள்ளது. (அ)

# இத்தாலியில் நபர் ஒருவருக்கு ஒரே நேரத்தில் கொரோனா, எச்.ஐ.வி, குரங்கம்மை தொற்று!

ரோம், ஓக. 27

இத்தாலியில் ஒருவருக்கு ஒரே நேரத்தில் கொரோனா, எச்.ஐ.வி, குரங்கம்மை தொற்று ஆகிய நோய்கள் உறுதி செய்யப்பட்டுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு ஒரே நேரத்தில் 3 வகை நோய்களால் ஒருவர் பாதிக்கப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டமை உலகில் இதுவே முதல்முறையாகும். ரோம், இத்தாலியை சேர்ந்த 36 வயதான ஆண் ஒருவரே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதாக உறுதி செய்யப் பட்டுள்ளது.

ஐந்து நாள் பயணமாக ஸ்பெயின் சென்று வந்த 36 வயது நபருக்கு 9 நாட்கள் கழித்து தொண்டை வலி, சோர்வு, தலைவலி உள்ளிட்ட அறிகுறிகள் தென்பட்டுள்ளன. அவர் இரண்டு கொரோனா தடுப்பூசிளைப் பெற்றுள்ளார். அவருக்கு முன்னர் ஒருமுறை கொரோனா பாதிப்பும் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், சிறிய, வலி நிறைந்த கொப்புளங்கள் அவரது உடலில் தென்பட்டுள்ளது. இதையடுத்து மருத்துவமனைக்கு சென்ற அந்த நபருக்கு பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளது. அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவருக்கு கல்லீரல் மற்றும் மண்ணீரலில் வீக்கம் இருப்பதையும் கண்டனர்.

பரிசோதனை முடிவுகளில் ஒமிக்ரோன் வகை கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டது. அதேபோல் குரங்கம்மை, எச்.ஐ.வி பாதிப்பும் உறுதி செய்யப்பட்டது அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

கொரோனா தொற்றும் குரங்கம்மை அறிகுறிகளும் ஒத்திருப்பதை எடுத்துக்காட்டும் வகையில் இது உள்ளது என இது குறித்து மருத்துவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அதேபோல் ஒருவருக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை கண்டறிந்து சிகிச்சை அளிக்க முன்னர் அன்ரிஜென் பரிசோதனையோடு ஒருவரது பாலியல் பழக்க வழக்கங்களையும் அறிந்து கொள்வது மிகவும் அவசியமானது எனவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

# பாகிஸ்தானில் வெள்ளப்பெருக்கு 326 சிறுவர்கள் உட்பட 903 பேர் பலி!

*கடுமையான மனிதப் பேரழிவு*

இஸ்லாமாபாத், ஓக. 27



பாகிஸ்தானில் பெய்த கோடைகால மழை மற்றும் வெள்ளப்பெருக்கில் சிக்கி 326 சிறுவர்கள் உட்பட 903 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு காலநிலை மாற்ற விவகாரங்கள் தொடர்பான அமைச்சர் ஷெர்ரி ரெஹ்மான் தெரிவித்தார்.

மழை- வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களுக்கு தங்குமிடம் மற்றும் உணவு இல்லை. மேலும் தகவல் தொடர்பு இணைப்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளன. இது ஒரு கடுமையான மனிதாபிமான பேரழிவு என சி.என்.என். சர்வதேச ஊடகத்துக்கு அவர் கூறினார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ அரசாங்கம் அனைத்து வளங்களையும் பயன்படுத்துகிறது எனத் தெரிவித்த அமைச்சர் ஷெர்ரி ரெஹ்மான், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ சர்வதேச நாடுகள் மற்றும் மனிதாபிமான அமைப்புகள் முன்வர வேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்தார்.

கடும் மழை மற்றும் வெள்ளத்தால் பாகிஸ்தானில் ஜூன் நடுப்பகுதியில் இருந்து 2.3 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

குறைந்தது 95,350 வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. தென்கிழக்கு மாகாணமான சிந்து மற்றும் பலுசிஸ்தானின் தென் மேற்கு மாகாணம் ஆகிய இரண்டும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன என ஐ.நா. மனிதாபிமான விவகாரங்களின் ஒருங்கிணைப்பு அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

பலுசிஸ்தானில் 504,000 க்கும் அதிகமான கால்நடைகள் உயிரிழந்துள்ளன. அதே சமயம் கிட்டத்தட்ட 3,000 கிலோமீற்றர்கள் வீதிகள் மற்றும் 129 பாலங்கள் சேதமடைந்துள்ளன. சேதமடைந்த பகுதிகளுக்கு உதவிப் பொருட்களை கொண்டு சேர்ப்பதற்கான நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ள நிவாரணம் வழங்கவும் சேதமடைந்த உள்கட்டமைப்பு வசதிகளை புனரமைப்பதற்கும் அதிக சர்வதேச நிதி தேவை என அரசாங்க தேசிய பேரிடர் முகாமைத்து ஆணையம் தெரிவித்துள்ளது.

அரசாங்க தேசிய பேரிடர் முகாமைத்துவ ஆணையத்தின் மாநாட்டில் நேற்று பேசிய காலநிலை மாற்ற விவகாரங்கள் தொடர்பான அமைச்சர் ஷெர்ரி ரெஹ்மான், தற்போதைய அழிவுகளை 2010 இல் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு அழிவுகளுடன் ஒப்பிட்டார்.

பலுசிஸ்தான், தெற்கு பஞ்சாப் மற்றும் சிந்து பிராந்தியத்தின் 30 மாவட்டங்கள் முன்னொருபோதும் காணாத மனிதாபிமான பேரழிவை எதிர்கொண்டுள்ள தாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த வார இறுதியில் மேலும் கன மழை மற்றும் வெள்ளப்பெருக்கு எதிர்பார்க்கப்படுகிறது. பேரழிவுகள் காரணமாக பலுசிஸ்தான் மற்றும் சிந்துவில் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலையில் பாகிஸ்தானுக்கு அவசர மனிதாபிமான உதவிகளை வழங்குவதாக சீனா நேற்று புதன்கிழமை கூறியது. பாகிஸ்தானில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உதவுவதற்காக 25,000 கூடாரங்கள் மற்றும் 300,000 டொலர் அவசரகால பண உதவி வழங்கப்படும் என பாகிஸ்தானில் உள்ள சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

கடந்த 30 ஆண்டுகளில் பெய்த சராசரி மழையை விட இவ்வாண்டு கோடை காலத்தில் பாகிஸ்தானில் 133 வீத அதிக மழை பெய்ததாக தேசிய பேரிடர் முகாமைத்துவ ஆணையம் கூறியது.

ஈரான் மற்றும் ஆப்கானிஸ்தான் எல்லையில் அமைந்துள்ள பலுசிஸ்தானில் ஆண்டு சராசரியை விட 305 வீத அதிக மழை பெய்துள்ளதாக பேரிடர் முகாமைத்துவ ஆணையம் தெரிவித்துள்ளது. (அ)

ஈழநாடு





## ஆசிய கிண்ணம் இன்று ஆரம்பம்! ஹொங்கொங் தகுதி பெற்றது!

மஸ்கட், ஓக. 27

ஆசிய கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கு ஹொங்கொங் அணி தகுதி பெற்றுள்ளது. அந்த அணி லீக் சுற்றில் இந்தியா, பாகிஸ்தான் அணிகளுடன் மோதவுள்ளது.

ஆசிய கிண்ணக் கிரிக்கெட் தொடர் இன்று சனிக்கிழமை ஐக்கிய அரபு எமிரேட்ஸில் தொடங்குகிறது. இந்தத் தொடரில் கலந்து கொள்ளும் கடைசி அணியாக ஹொங்கொங் தெரிவானது.

இந்த அணி தகுதி சுற்றின் கடைசி ஆட்டத்தில் நேற்று முன்தினம் 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியை தோற்கடித்தது.

148 ஓட்டங்கள் இலக்கை துரத்திய ஹொங்கொங் அணி 19 ஓவர்களில் 2 விக்கெட்களை மட்டும் இழந்து வெற்றி பெற்றது. அதிகபட்சமாக யாசிம் முர்டசா 43 பந்துகளில், ஒரு சிக்ஸர், 7 பௌண்ட்ரிகளுடன் 58 ஓட்டங்கள் விளாசினார். இந்த வெற்றியின் மூலம் ஹொங்கொங் பிரதான சுற்றில் குழு ஏ-யில் இந்தியா, பாகிஸ்தான் அணிகளுடன் 3ஆவது அணியாக இணைந்துள்ளது. அந்த அணி வரும் 31ஆம் திகதி இந்தியாவுடனும், செப்ரெம்பர் 2ஆம் திகதி பாகிஸ்தானுடனும் மோதுகிறது. (ஐ)

# இங்கிலாந்து அபார பந்துவீச்சு; சுருண்டது தென்னாபிரிக்கா!

மன்செஸ்டர், ஓக. 27

இங்கிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா அணி 151 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

இங்கிலாந்து சென்றுள்ள தென்னாபிரிக்க அணி தற்போது டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. முதல் போட்டியில் தென்னாபிரிக்கா இனிங்ஸ் வெற்றி பெற்ற நிலையில், இரண்டாவது போட்டி நேற்று முன்தினம் ஆரம்பமானது.

மன்செஸ்டரின் ஓல்ட் டிரா போர்டில் நேற்று முன்தினம் தொடங்கிய இந்த டெஸ்டில் நாணயச் சுழற்சியில் வென்று துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணிக்கு தொடக்கமே அதிர்ச்சியாக இருந்தது.

சாரேல் எர்வீ 3 ஓட்டங்களில் ஜேம்ஸ் அண்டர்சன் பந்தில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து சீரான இடைவெளியில் தென்னாபிரிக்க அணி விக்கெட்களை இழந்தது.

அணித்தலைவர் டீன் எல்கர் 12, கீகன் பீற்றர்சன் 21, அய்டன் மார்க்ரம் 14, ராஸி வான் டேர் டுஸன் 16, சைமன் ஹார்மர் 2, கேசவ் மகாராஜ் 0, கைல் வெர்ரின்னே 21 ஓட்டங்களில் நடையை கட்டினர்.



38 ஓவர்களில் 108 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்களை இழந்த நிலையில் அன்ரிச் நோர்ட்ஜேயுடன் இணைந்து காகிசோ ரபாடா சிறிது போராடினார்.

நோர்ட்ஜே 10 ஓட்டங்களில் ஒல்லி ரொபின்சன் பந்திலும், ரபாடா 36 ஓட்டங்களில் ஜேக் லீச் பந்திலும் வெளியேற 53.2 ஓவர்களில் 151 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது தென்னாபிரிக்க அணி.

இங்கிலாந்து அணி சார்பில் ஜேம்ஸ் அண்டர்சன் 3, ஸ்டுவர்ட் பிரோட் 3, பென் ஸ்டோக்ஸ் 2 விக்கெட்களை வீழ்த்தினர். (ஐ)

# கும்ப்ளேயின் பதவியை பறிக்கிறது பஞ்சாப் கிங்ஸ்!

புதுடில்லி, ஓக. 27

பஞ்சாப் கிங்ஸ் பயிற்சியாளர் பதவியில் இருந்து கும்ப்ளேயை நீக்க முடிவு அணி நிர்வாகம் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அனில் கும்ப்ளே ஐ.பி.எல். தொடருக்கான பஞ்சாப் கிங்ஸ் அணியின் தலைமை பயிற்றுநராக கடந்த 2020ஆம் ஆண்டு பொறுப்பேற்றார்.

அதன் பிறகு நடந்த 3 தொடர்களிலும் பஞ்சாப் கிங்ஸ் அணி பிளே-ஒவ் சுற்றுக்குக்கூட முன்னேறவில்லை. 2020, 2021, 2022ஆம் ஆண்டுகளில் அந்த அணி 6ஆவது இடமே பிடித்தது. அணியின் செயல்பாடு குறித்து கடும் அதிருப்தி அடைந்திருக்கும் பஞ்சாப் கிங்ஸ் நிர்வாகத்தினர், தலைமை பயிற்றுநர் பதவியில் இருந்து கும்ப்ளேவை நீக்க முடிவு செய்துள்ளனர்.

புதிய தலைமை பயிற்றுநரைத் தேடும் வேட்டையில் இறங்கி இருக்கும் பஞ்சாப் அணி நிர்வாகம் விரைவில் புதிய பயிற்றுநர் குறித்த அறிவிப்பை வெளியிடும் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன. அத்துடன், கடந்த தொடரில் அந்த அணியின் தலைவராக இருந்த மயங்க் அகர்வால் மொத்தம் 196 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து சொதப்பினார். எனவே, அவரின் பதவியும் பறிபோகும் என்று தெரிகிறது. (ஐ)



# அமெரிக்க ஓப்பன் ஜொகோவிச் விலகல்!

நியூயோர்க், ஓக. 27

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரில் இருந்து விலகியுள்ளார் மூன்று முறை சம்பியன் பட்டம் வென்ற ஜொகோவிச். கொரோனா தடுப்பூசி செலுத்தாமையாலேயே அவர் இந்த தொடரிலிருந்து வெளியேறினார் என்று தெரிகிறது.

35 வயதான ஜொகோவிச், சேர்பிய நாட்டை சேர்ந்தவர். இதுவரையில் 21 கிராண்ட்ஸ்லம் பட்டங்களை ஆடவர் ஒற்றையர் பிரிவில் விளையாடி வென்றுள்ளார். கடந்த ஜூலையில் நடந்த விம்பிள்டன் அவரின் அண்மைய கிராண்ட்ஸ்லாம் வெற்றியாக அமைந்தது.

இந்நிலையில், அமெரிக்க ஓப்பன் தொடரில் தன்னால் பங்கேற்க முடியவில்லை என தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் ருவீட் செய்துள்ளார்.

“இந்த முறை அமெரிக்க ஓப்பன் தொடரில் விளையாட என்னால் நியூயோர்க் பயணிக்க முடியவில்லை. அடுத்த முறை ரென்னிஸ் கோர்ட்டில் களம் காண நான் ஆவலாக உள்ளேன். அதுவரை உடல்தகுதியுடனும் நேர்மறை எண்ணத்துடனும் இருப்பேன். வெகு விரைவில் களத்தில் சந்திப்போம்” என அவர் ருவீட் செய்துள்ளார்.

அமெரிக்காவில் கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே ஜொகோவிச் நடப்பு அமெரிக்க ஓப்பன் தொடரில் பங்கேற்கவில்லை என தெரிகிறது.

முன்னதாக, கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற அவுஸ்திரேலிய ஓபன் தொடரிலும் தடுப்பூசி செலுத்திக் கொள்ளாததால் அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

இந்த விவகாரத்தில் அவர் சட்டப் போராட்டம் மேற்கொண்டார். இருந்தும் அவர் அவுஸ்திரேலியாவில் இருந்து தொடரில் பங்கேற்க முடியாமல் வெளியேறினார். அப்போது அது உலகளவில் கவனம் பெற்றது. தற்போது மீண்டும் அதே தடுப்பூசி விவகாரத்தால் அவர் அமெரிக்க ஓப்பனையும் தவறவிட்டுள்ளார். (ஐ)



### அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ்

# முதல் போட்டியில் கோவினிச்சை எதிர்க்கிறார் செரீனா!



நியூயோர்க், ஓக. 27

அமெரிக்கஓப்பன் ரென்னிஸில் பங்கேற்கும் வீரர்-வீராங்கனைகளின் மோதல் அட்டவணை நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

இதன்படி ஆண்கள் ஒற்றையர் பிரிவில் முதல்நிலை வீரர் டேனில் மெத்வதேவ் (ரஷ்யா), ஸ்டீபன் கோஸ்லோவை (அமெரிக்கா) சந்திக்கிறார். முன்னாள் சாம்பியன் ஸ்பெயினின் ரபெல் நடால், அவுஸ்திரேலியாவின் ரிங்கி ஹிஜிகட்டாவை எதிர்கொள்கிறார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் முதல்நிலை வீராங்கனை போலந்தின் ஸ்வியாரெக் தனது சவாலை ஜாஸ்மின் பாவ்லினியுடன் (இத்தாலி) தொடங்குகிறார்.

இந்த தொடருடன் ரென்னிஸில இருந்து விடைபெற திட்டமிட்டுள்ள முன்னாள் முதல்நிலை வீராங்கனையான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், முதல் சுற்றில் டன்கா கோவினிச்சை (மொன்டினீக்ரோ) சந்திக்கிறார்.

# பயங்கரவாதச் சட்டத்தை அகற்றுவதற்கு சிங்கள, பௌத்த சமூகம் முன்வரவேண்டும்

## பொதுச் சேவை ஊழியர் சங்கம் கோரிக்கை

**கொழும்பு, ஓக. 27**

**நாட்டில் பயங்கரவாதம் இல்லாத அரசியல் பின்னணியில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இந்த நாட்களில் மேற்கொள்ளப்படும் கைதுகள் ஊடாக சட்டம் தவறாகப் பயன்படுத்துவதாக, சுதந்திர வர்த்தக வலய ஊழியர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பழமையான தொழிற்சங்கம் ஒன்று கண்டித்துள்ளது.**

கைது செய்யப்பட்ட அனைவரையும் உடனடியாக விடுவிக்குமாறு கோரி, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாக நீக்குமாறு அரசாங்கத்தை வற்புறுத்த தெற்கில் உள்ள சிங்கள பௌத்த சமூகமும் முன்வரவேண்டும் என சுதந்திர வர்த்தக வலய மற்றும் பொதுச் சேவை ஊழியர் சங்கம் வலியுறுத்துகிறது.

மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இல்லாதொழிக்குமாறு அரசாங்கங்களுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுப்பதன் பின்னணியில், பாதுகாப்புப் படையினர் இந்தச் செயலைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவேண்டும் என, சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் பொதுச் சேவை ஊழியர் சங்கத்தின் இணைச் செயலாளர் அன்டன் மார்கஸ், அறிக்கை ஒன்றின் ஊடாக கோரிக்கை விடுத்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்கள் வன்முறையில் ஈடுபட்டதாகவும், அமைதியை குலைத்ததாகவும், அவர்களுக்கு எதிராக விதிக்கப்பட்ட நீதிமன்ற உத்தரவை மீறியதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்தால், பயங்கரவாதத் தடைச் சட்டம் சட்டத்தின் கீழ் கையாள்வது அவசியமில்லை என சுட்டிக்காட்டியுள்ள தொழிற் சங்கத் தலைவர், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தை அதற்குப் பயன்படுத்தலாம் என குறிப்பிட்டார். (அ)

# மண்ணெண்ணெய் விலையுயர்வு மீன்பிடியை நசுக்கும் முயற்சியா?

## தெற்கு கடற்றொழிலாளர்கள் கேள்வி

கொழும்பு, ஓக. 27

மண்ணெண்ணெய் விலையை உயர்த்தி, சிறு மீனவர்களை வேலையிழக்கச் செய்து, கடல் வளத்தை பெரும் செல்வந்தர்களுக்கு கிடைக்கச் செய்யும் திட்டம் உள்ளதா என்ற சந்தேகத்தை, தென்னிலங்கையின் கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் ஒருவர் எழுப்பியுள்ளார்.

கடந்த 21ஆம் திகதி நள்ளிரவு முதல் பெற்றோலிய கூட்டுத்தாபனம் மண்ணெண்ணெய் விலையை உயர்த்தியது. இதற்கமைய ஒரு லீற்றர் மண்ணெண்ணெயின் விலை 253 ரூபாவால் அதிகரிக்கப்பட்டதுடன், அதன் புதிய விலை 340 ரூபாவாகும்.

இது குறித்து அகில இலங்கை மீனவ மக்கள் தொழிற்சங்கத்தின் தலைவர் அருண ரொஷாந்த தெரிவிக்கையில்-

அண்மையில், இந்த நாட்டில் சிறு மீன்பிடித் தொழிலை நசுக்குவதற்கான முன்மொழிவுகளை அரசாங்கம் மீன்பிடிக் கொள்கையாகக் கொண்டு வந்தது. அதாவது புதிய படகுகள் உற்பத்திக்குத் தடை விதிக்கப்பட்டது. 55 அடிக்கு மேல் நீளமுடைய படகுகளை மாத்திரமே உற்பத்தி செய்ய முடியும் எனக் கூறினார்கள். அதற்கு ஐம்பது வீதம் நிவாரணமும் வழங்கப்பட்டது.

இலங்கை வரலாற்றில் வரலாறு காணாத வகையில் மண்ணெண்ணெய் விலை உயர்வடைந்துள்ளமையால் அரசாங்கம் என்ன செய்யப் போகிறது என்ற பாரிய கேள்வி எழுந்துள்ளது.

மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பின் மூலம் இந்த யோசனை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நாளொன்றுக்கு சுமார் 40 லீற்றர் மண்ணெண்ணெய் பயன்படுத்தும் சிறிய மீன்பிடித் தொழிலாளர்களுக்கு மண்ணெண்ணெய் மற்றும் எண்ணெய் கொள்வனவு செய்வதற்கு 15,000 ஆயிரம் ரூபாவுக்கு மேல் செலவழிக்க வேண்டியுள்ளது.

தற்போதுள்ள நிலைமைக்கு உடனடி தீர்வைக் கோரி மீனவர்கள் குடும்ப உறுப்பினர்களுடன் சிலாபத்தில் கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம். ஆனால் எந்தவொரு பொறுப்பான அதிகாரியும் அங்கு வரவில்லை.

சிறுதொழிலாளர்கள் தொழிலில் ஈடுபடும் வாய்ப்பை முடக்கியதன் ஊடாக இயற்கையாகவே பணக்காரர்களின் கைகளுக்கு கடல் வளம் செல்லும் நிலை உருவாகியுள்ளது. எரிபொருள் விலையேற்றம் காரணமாக இனி மீன்பிடியில் ஈடுபடப்போவது இல்லையென தொழிலாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

நாட்டில் நிலவும் மண்ணெண்ணெய் தட்டுப்பாடு காரணமாக மூன்றரை மாதங்களுக்கும் மேலாக சிறிய மீன்பிடி தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர். அக்காலப்பகுதியில் அதிகாரிகளுடன் நடத்தப்பட்ட நான்கு பேச்சுவார்த்தைகள் தீர்மானம் எதுவும் எட்டப்படாமல் நிறைடைந்தன-என்றார். (அ)

# பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டுசெல்லல் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடல்!

கொழும்பு, ஓக. 27

“இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் முன்னோக்கி செல்லும் வழி” என்ற தலைப்பில் மத்திய வங்கியின் ஆளுநரால் நடாத்தப்படும் விசேட நிகழ்ச்சியில் பங்கேற்குமாறு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பாராளுமன்ற பதில் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர அறிவித்துள்ளார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் பணிப்புரையின் பிரகாரம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த கலந்துரையாடல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணி முதல் 4.00 மணி வரை பாராளுமன்றத்தின் குழு அறை இலக்கம் 1 இல் நடைபெறவுள்ளது.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலை மற்றும் எதிர்கால பொருளாதார திசைகள் தொடர்பில் பயனுள்ள சொற்பொழிவுக்கான வாய்ப்பை வழங்கும் நோக்கில் இந்த கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பதில் செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# மஹாபொல அடுத்த வாரம்

கொழும்பு, ஓக. 27

இரண்டு மாதங்களாக வழங்கப்படாமல் இருந்த பல்கலைக் கழக மாணவர்களின் மஹாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவுகளை அடுத்த வாரம் முதல் வழங்குவதற்கு கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

அதன்படி, ஜூன், ஜூலை மாதத்திற்கான கொடுப்பனவு அடுத்த வாரமளவில் வழங்கப் படவுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த உதவித்தொகைகளுக்கு தேவையான பணத்தை வழங்க திறைசேரி சம்மதம் தெரிவித்துள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நிலுவைத் தொகையை செலுத்திய பின்னர், வழமை போன்று மாதாந்தம் கொடுப்பனவு வழங்கப்படும் எனவும் அமைச்சர் கூறினார். (அ)

# பிரித்தானிய அரசினாலும் பயண ஆலோசனை நீக்கம்

கொழும்பு, ஓக. 27

பிரித்தானிய அரசாங்கம், இலங்கைக்கான பயண ஆலோசனையை நேற்று நீக்கியுள்ளது.

இலங்கைக்கு மேற்கொள்ளும் அத்தியாவசிய பயணங்களைத் தவிர ஏனைய பயணங் களுக்கு எதிராக இனி அறிவுறுத்தல்களை விடுப்பதில்லை என்றும் அந்த அரசாங்கம் அறிவித்துள்ளது.

முன்னதாக பிரித்தானிய அரசாங்கம் இலங்கைக்கான அத்தியாவசிய பயணங்களைத் தவிர மற்ற அனைவருக்கும் பயண ஆலோசனையை வழங்கியிருந்தது. (அ)

# மரண அறிவித்தல்

தோற்றம்
05 - 01 - 1958



மறைவு
21 - 08 - 2022

## மார்க்கண்டு அமிர்தலிங்கம்

கிளிநொச்சி உருத்திரபுரம் சிவநகரைப் பிறப்பிடமாகவும், வன்னேரிக்குளத்தை வசிப்பிடமாகவும், நெதர்லாந்து Lelystad ஐ வதிவிடமாகவும் கொண்ட மார்க்கண்டு அமிர்தலிங்கம் அவர்கள் 21.08.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், இராமநாதி சின்னத்தங்கம் தம்பதிகள் மற்றும் பொன்னையா சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு முத்தம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு, நாகமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், செல்வராணி அவர்களின் அன்புக் கணவரும், காண்டீபன்(பிரித்தானியா), தர்மினி(பிரித்தானியா), குமுதா(நெதர்லாந்து), அமுதா(நெதர்லாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமகள், கேசவன், கஜானன், பாலராஜ் ஆகியோரின் அன்பு மாமனாரும், காசினி, ஆரியன், கயல்விழி, ஆதிரா, நயனிகா ஆகியோரின் அன்புப் பேரனும், தர்மலிங்கம்(இலங்கை), இரத்தினம்(இலங்கை), காலஞ்சென்றவர்களான புஸ்பராணி, அருளம்பலம் மற்றும் குகதாஸ்(இலங்கை), யோதீஸ்வரன்(ஈசன், பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கணவதிப்பிள்ளை(இலங்கை), இராசமணி(பிரித்தானியா), அருட்சோதிநாதன்(இலங்கை), செல்வநாயகம்(இலங்கை), காலஞ்சென்ற கனகரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

*பார்வைக்கு :*
Wednesday, 24 Aug 2022 7:00 PM – 7:45 PM
Saturday, 27 Aug 2022 6:00 PM – 6:45 PM
Crematorium yardenhuis van Lelystad Oostranddreef 1, 8212 AZ Lelystad, Netherlands

*கிரியை :*
Sunday, 28 Aug 2022 9:00 AM – 2:00 PM
Begraafplaats Hoorn Berkhouterweg 26, 1624 NT Hoorn, Netherlands

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
**மகன் – காண்டீபன்**

*தொடர்புகளுக்கு :*
**காண்டீபன் – மகன்** – +447448864388
**தர்மினி – மகள்** – +447940228494
**அமுதா – மகள்** – +31650604009
**குமுதா – மகள்** – +31636006785
**ஈசன் – சகோதரன்** – +33681714396
**இரத்தினம் – சகோதரி** – +94741932638

## இலங்கையை...

அத்துடன், இலங்கையின் இறை யாண்மை, சுதந்திரம் மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதற்காக சர்வதேச அரங்கில் சீனா எப்போதும் இலங்கைக்கு ஆதரவளித்து வருகிறது. இதனைத் தொடர்ந்தும் செய்யும் என் றும் அவர் கூறியுள்ளார்.

“ஒரு சீனக் கொள்கையில் இருந்து - யுவான் வாங் 5' என்ற தலைப்பில் அவர் எழுதிய கட்டுரையில் மேற்கண்டவாறு கூறியுள்ள அவர்,

“அடுத்த மாதம், ஐ. நா. மனித உரி மைகள் பேரவையின் 51ஆவது அமர்வு ஜெனிவாவில் நடைபெறவுள்ளது. இதில், இலங்கையின் மனித உரிமைகள் பிரச்னைகள் மீண்டும் கிளர்ந்தெழலாம். இலங்கை மக்கள் கடுமையான பொருளா தார மற்றும் மனிதாபிமான சிக்கல்களில் சிக்கித் தவிக்கும் நிலையில், மனித உரி மைகள் பற்றி எப்போதும் பிரசாரம் செய் யும் அந்த நாடுகள் உண்மையில் என்ன செய்யும் என்று பலர் ஆச்சரியப்படலாம்.

“உறுதியான ஆதரவை வழங்குவதன் மூலம் இலங்கையின் மனித உரிமைகள் நெருக்கடியைத் தணிக்க அவர்கள் உதவு வார்களா? அல்லது அவர்கள் மீண்டும் மனித உரிமைகளை ஒரு மூடிமறைக்கும் கருவியாகப் பயன்படுத்தி நாட்டின் உள் விவகாரங்களில் தலையிட்டு இலங்கை மக்களின் காயங்களில் தொடர்ந்தும் உப்பைத் தடவுவார்களா? என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்,”

இலங்கையின் தேசிய இறையாண்மை, சுதந்திரம் மற்றும் பிராந்திய ஒருமைப் பாடு மீதான எந்தவொரு மீறலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அம்பாந் தோட்டை அல்லது வேறு எந்த துறை முகத்திலும் வெளிநாட்டுக் கப்பலின் துறைமுக அழைப்புக்கு அனுமதி வழங்கு வது என்பது இலங்கை அரசாங்கத்தின் முழுமையான முடிவாகும்.

“பாதுகாப்புக் கவலைகள்” என்று அழைப்படுவதன் அடிப்படையிலான வெளிப்புறத் தடைகள், சில சக்திகளிட மிருந்து எந்த ஆதாரமும் இல்லாமல் - உண்மையில் இது இலங்கையின் இறை யாண்மை மற்றும் சுதந்திரத்தில் முழுத் தலையீடாகும். அதிர்ஷ்டவசமாக, சீனா மற்றும் இலங்கையின் கூட்டு முயற்சியு டன் இந்தச் சம்பவம் சரியாக தீர்க்கப்பட் டது. இது இலங்கையின் இறையாண்மை மற்றும் சுதந்திரத்தைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல், சர்வதேச நியாயத்தை யும் நீதியையும் மீண்டும் பாதுகாக் கிறது,” - என்றும் கூறியுள்ளார். (ஐ)

## எரிபொருள்...

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் சட்டமா அதிபர் உள்ளிட்டோர் பிரதி வாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

எரிபொருள் உற்பத்தி செய்யும் நாடு களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு, பெற்றோலிய பொருட் களை இறக்குமதி செய்வதற்கும் விநியோ கிப்பதற்கும் விற்பனை செய்வதற்கும் அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

அதிக இலாபம் ஈட்டும் பல எரி பொருள் நிரப்பு நிலையங்கள் உட்பட இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாப னத்துக்கு சொந்தமான பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்களை தனி யார் மயமாக்குவதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இதன் போது மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள் ளனர்.

இதனால், பெற்றோலிய கூட்டுத்தா பனத்துக்கும் பொது மக்களுக்கும் இது கடுமையான பாதகத்தையும் நட்டத் தையும் ஏற்படுத்தும். இது மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செய லாகும் என்றும் மனுவில் குற்றஞ்சாட் டப்பட்டுள்ளதுடன், இந்த அமைச்சரவை தீர்மானத்துக்கு தடை விதிக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. (ஐ)

## மூடப்பட்டிருந்த...

பிரதேசத்தில் பெரும் பகுதியை உயர் பாதுகாப்பு வலயமாக இராணுவம் அறி வித்தது. சுமார் 30 வருடங்களுக்கும் மேலாக இராணுவ பிடியிலிருந்த இந்தப் பிரதேசங் கள் நல்லாட்சி அரசின் காலத்தில் கணிச மானளவு விடுவிக்கப்பட்டது.

கட்டுவன் - மயிலிட்டி வீதியும் இவ் வாறு விடுவிக்கப்பட்டபோதிலும், வீதி யில் 480 மீற்றர் துண்டு தொடர்ந்தும் உயர் பாதுகாப்பு வலயமாகவே இருந் தது. முள்கம்பி வேலி அமைத்து இந்த வீதி மூடப்பட்டிருந்தது. இதனால், இந்த வீதியைப் பயன்படுத்திய மக்கள் அருகி லிருந்த தனியாருக்கு சொந்தமான காணி ஊடாகவே பயணித்தனர்.

இந்த வீதியை விடுவிக்க பல ஆண்டு களாக முயற்சி எடுக்கப்பட்டபோதிலும் அதற்கு இராணுவத் தரப்பு சம்மதிக்க வில்லை. இதனால், பெரும் சிரமங்களு டன் மக்கள் தொடர்ந்து தனியார் காணி ஊடாகவே பயணித்தனர்.

தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விளைவாக தற்போது இந்த வீதி திருத்தியமைக்கப்பட்டு பழைய வீதியுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதனால், தெல்லிப்பழை ஊடாக விமான நிலையத்துக்கு இலகுவாக பயணிக்க முடியும். மயிலிட்டியிலிருந்து தெல்லிப் பழை மருத்துவமனைக்கு மக்கள் விரை வாக செல்ல முடியும். பேருந்து சேவை யையும் இலகுவாக நடத்த முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இந்த வீதி திறப்பு நிகழ் வில் செய்தியாளர்களுக்கு அனுமதி அளிக் கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக் கது. (ஐ)

## மேலும் 25...

திப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப் பட்டது.

கிராமிய மற்றும் நகர்ப்புறங்களிலுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங் களிலுள்ள பெண்கள் மற்றும் சிறுவர் களுக்காக வழங்கப்படும் நிவாரணத்தை அதிகரிக்குமாறு பிரதமர் தினேஷ் குண வர்த்தன இதன் போது யுனிசெவ் நிறு வனத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கு பதிலளித்த யுனிசெவ்வின் தெற்காசிய பணிப்பாளர் ஜோர்ஜ் லாயா அஜே “நாட்டிலுள்ள பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான பல வேலைத்திட்டங் கள் செயல்படுத்தப்படுகின்றன. இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் தாம் இலங்கையுடன் இணைந்து செயல்படு வோம். இந்த வேலைத்திட்டங்கள் எதிர் காலத்தில் மேலும் பரந்தளவில் முன்னெ டுக்கப்படும். இலங்கை மக்களுக்காக சுத்தமான குடிதண்ணீரை வழங்குதல், மாணவர்களின் கல்விக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் ஏனைய அத்தி யாவசிய பொருட்களை வழங்குதல் என் பன இந்த வேலைத்திட்டங்களின் ஊடாக முன்னெடுக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## ரஞ்சன் நேற்று...

கவோ - செயல்படவோ கூடாது என்ற நிபந்தனையுடன் ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க அளித்த பொது மன்னிப்பி லேயே ரஞ்சன் விடுதலை செய்யப்பட் டார்.

வெலிக்கடை சிறையிலிருந்து விடு தலையானவரை ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலர் வரவேற்றனர்.

இதேவேளை, விடுதலையான ரஞ்சன் ராமநாயக்கவுக்கு புலம்பெயர் இலங்கை தொழிலாளர்களின் மேம்பாட்டுக்கான நல்லெண்ண தூதுவர் பதவி வழங்கப் பட்டுள்ளது. வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் அமைச்சர் மனுஷ நாணயக்கார இதனை உத்தி யோகபூர்வமாக அறிவித்துள்ளார். (ஐ)

## வடமராட்சியில்...

மானவை எனவும் தெரிவிக்கப்பட்டது.

தீ பரவியமைக்கான காரணம் தெரிய வில்லை எனவும் இது ஒரு சதி முயற்சி யாக இருக்கலாம் என்றும் பொலிஸா ருக்கு வாடி உரிமையாளர்கள் தெரிவித்த னர். (ஐ)



# சங்கரத்தையில் மிதிவெடி மீட்பு!

யாழ்ப்பாணம், ஓக. 27

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கரத்தைப் பகுதியில் மிதி வெடிகள் நேற்று முன் தினம் மீட்கப்பட்டன என வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சங்கரத்தை பகுதியில் உள்ள வீடொன் றின் காணியை வீட்டின் உரிமையாளர் துப்புரவு செய்துள்ளார். இதன்போது சந்தேகத்துக்கிடமான முறையில் இரு பொருள்கள் காணப்பட்டதை அவதா னித்தார்.

இதன்பின்னர் வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதை யடுத்து, குறித்த பகுதிக்கு விரைந்த பொலி ஸார் சந்தேகத்துக்கிடமாகக் காணப்பட்ட பொருள்களை அவதானித்து மிதிவெடி கள் என்பதை இனங்கண்டனர். கண்டெ டுக்கப்பட்ட மிதிவெடிகளை செயலி ழக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை வட்டுக்கோட்டைப் பொலிஸார் முன் னெடுத்துள்ளனர். (அ)

# தானிஷ் அலி உட்பட ஏழு பேருக்கு பிணை

கொழும்பு, ஓக. 27

ஜனாதிபதி மாளிகைக்குள் அத்துமீறி பிரவேசித்த குற்றச் சாட்டில் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த தானிஷ் அலி உள்ளிட்ட 07 சந்தேக நபர்களை பிணையில் விடு விக்க கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே இந்த உத்தரவை பிறப்பித் துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் சந்தேக நபர் களாக பெயரிடப்பட் டுள்ள லஹிரு வீரசேகர மற்றும் மற்றுமொரு சந்தேக நபர் ஆகி யோர் நேற்று நீதிமன்றத்தில் ஆஜராகி தலா 5 இலட்சம் ரூபா பெறு மதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டனர். (அ)

## சந்நிதியானுக்கு...

திருவிழாக்கள் எதிர்வரும் 31ஆம் திகதி புதன்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளது. இதில், எதிர்வரும் 9ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 10ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

செல்வச்சந்நிதி பெருந்திருவிழாவை ஒட்டி விசேட போக்குவரத்து வசதிகள், குடிதண்ணீர் ஏற்பாடுகள் செய்யப்பட் டுள்ளன. (ஐ)

## மோட்டார்...

சம்பவம் குறித்து மேலும் தெரிய வருபவை வருமாறு,

உயிரிழந்த கர்ப்பவதி பெண்ணை அவரின் கணவர் மருத்துவ பரிசோத னைக்காக மோட்டார் சைக்கிளில் மூளாய் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

பொன்னாலை பாலம் அருகே அவர் கள் சென்றபோது மோட்டார் சைக்கி ளின் பின் இருக்கையில் அமர்ந்து சென்ற அவர், தவறிவிழுந்து அந்த இடத்திலேயே உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரி சோதனைக்காக யாழ். போதனா மருத்து வமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் வட்டுக் கோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ஐ-3)

## ஐ. எம். எவ் ...

மதுவரிச் சட்டம் உள்ளிட்ட திறைசேரி தொடர்பான மேலதிக தகவல்களை வழங்குமாறு சர்வதேச நாணய நிதியத் தின் பிரதிநிதிகள் கேட்டனர். இந்தத் தகவல்களை எதிர்வரும் திங்கட்கிழ மைக்குள் வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிதி ஆலோசகர்கள், சட்ட ஆலோசகர்கள் நேற்றைய பேச்சில் கலந்துகொண்டது டன், எதிர்வரும் புதன்கிழமை அடுத்த சுற்றுப் பேச்சை நடத்துவதற்குத் தீர் மானிக்கப்பட்டது. (ஐ)

## வார இறுதி...

கைக்கு இதற்கான அனுமதி வழங்கப்பட் டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, ஏ முதல் எல் மற்றும் பி முதல் டபிள்யூ வரையான வலயங்களி லும், காலை வேளையில் 1 மணித்தியால மும் 40 நிமிடங்களும், இரவு வேளையில் ஒரு மணி நேரமும் 20 நிமிடங்களும் மின்வெட்டு நடைமுறையாகும்.

இதேநேரம், கொழும்பு முன்னுரிமை வலயங்களில் காலை 6.00 மணி முதல் 8.30 வரையான காலப்பகுதியில் 2 மணித்தியாலங்களும் 30 நிமிடங்களும் மின் துண்டிப்பு அமுலாக்கப்படவுள் ளது.

இதுதவிர, எம், என், ஓ, எக்ஸ், வை, இசற் ஆகிய வலயங்களில் அதிகாலை 5.30 மணிமுதல் காலை 8.30 மணிவரை யான காலப்பகுதியில் 3 மணித்தியாலங் கள் மின் துண்டிக்கப்படவுள்ளதாக இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

ஈழநாடு
Eelanadu

# ஹிட்லர் பாணி அரசை அமைக்க காய் நகர்த்தி வருகிறார் ரணில்!

## சிறிதுங்க ஜயசூரிய குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக. 27

**மக்கள் ஆணையின்றி ஜனாதிபதி பதவியை வகிக்கும் ரணில் விக்ரமசிங்க, ஹிட்லர் பாணி அரசாங்கத்தை அமைக்க காய் நகர்த்தி வருவதாக குற்றம் சுமத்தும் இடதுசாரித் தலைவரான சிறிதுங்க ஜயசூரிய, அரசாங்கத்தை அகற்ற பாரிய பொது அமைப்பை கட்டியெழுப்பவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.**

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டு ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில், ஐக்கிய சோசலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தொழிலாளர் வர்க்கம் தலைமையிலான இடதுசாரி சக்திகள், விவசாய அமைப்புகள், பெருந்தோட்ட மக்கள் மாத்திரமல்லாது வடக்கில் உள்ள தமிழ் மக்களையும் ஒன்றிணைத்து பாரிய மக்கள் சக்தி ஊடாக ரணில் - ராஜபக்ச அரசாங்கத்தை விரட்டுவதே எங்களின் இன்றைய வேலையாகிவிட்டது.

அடுத்த வருடம் பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஜனாதிபதி நடத்தமாட்டார். இராணுவ பொலிஸ் அரசை உருவாக்கும் வேலைத்திட்டத்தில் ஈடுபட் டுள்ளார்.

மக்களின் வெற்றிக்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்-என்றார். (அ)



## நல்லிணக்க மையத்தை நேற்று திறந்துவைத்த இராணுவ தளபதி

யாழ்ப்பாணம், ஒக. 27

பலாலி சந்திப் பகுதியில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட நல்லிணக்க மையம் இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகேயால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விஜயசுந்தர இராணுவ தளபதியை வரவேற்றார்.

இலங்கை இராணுவத்தின் பங்களிப்புடன் இலங்கையில் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை உருவாக்கும் முகமாக இந்த நல்லிணக்க மையம் திறந்து வைக்கப்பட்டது என தெரிவிக்கப்பட்டது.

புதிதாக பதவியேற்ற இலங்கை இராணுவ தளபதியின் யாழ்.மாவட்டத்துக்கான முதல் விஜயம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள இலங்கை இராணுவ தளபதி யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள நிகழ்வுகளில் நேற்று கலந்து கொண்டார். (அ-03)

## 5600 கிலோ கடற்சிப்பிகளுடன் கற்பிட்டியில் ஒருவர் சிக்கினார்

கொழும்பு, ஒக. 27

கற்பிட்டி தேத்தாவாடிய பகுதியில் தோட்டமொன்றில் அனுமதிப் பத்திரமில்லாமல் கடற்சிப்பிகளை மறைத்து வைத்திருந்த ஒருவர் நேற்றுமுன்தினம் அதிகாலை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அனுமதிப்பத்திரமில்லாமல் கடற்சிப்பிகள் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய அந்த பகுதியில் பொலிஸார் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது மறைத்து வைக்கப்பட்டிருந்த 5636 கிலோ கடற்சிப்பிகள் கைப்பற்றப்பட்டதுடன் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

## அனுமதிப் பத்திரத்துக்கு முரணாக கால்நடை ஏற்றிய இருவர் கைது!

கிளிநொச்சி, ஒக. 27

அனுமதிப் பத்திரத்துக்கு முரணான வகையில் கால்நடைகளை ஏற்றிச் சென்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரமந்தனாறு பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஆறு கால்நடைகளை ஏற்றிச் சென்ற லொறியுடன் சாரதி, உதவியாளர் ஆகிய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

குருநாகல் தம்பதெனிய பகுதிக்கு குறித்த கால்நடைகளைக் கொண்டு செல்ல முற்பட்டவேளையே பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து சோதனை மேற்கொள்ளப்பட்டது.

கால்நடைகளை கொண்டு செல்வதற்கான அனுமதிப் பத்திரம் இருந்தபோதிலும், இரவுவேளைகளில் கால்நடை கொண்டு செல்ல முடியாத காரணத்தினாலும், சுகாதாரப் பரிசோதகரின் மருத்துவச் சான்றிதழ் இல்லாமை மற்றும் கால்நடை கொண்டு செல்லக்கூடிய வசதிகள் வாகனத்தில் ஏற்படுத்தி கொடுக்கப்படாமை உள்ளிட்ட காரணங்களினாலும் இவர்கள் கைது செய்யப்பட்டனர். (அ)

## இலங்கைக்குக் கடன் வழங்கும் கூட்டத்தை ஏற்பாடு செய்வதற்கு ஜப்பான் அரசு தயார்!

கொழும்பு, ஒக. 27

இலங்கைக்கு கடன் வழங்குநர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்ய ஜப்பான் தயாராக இருப்பதாக ரொய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளது.

சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையை அதன் மோசமான கடன் நெருக்கடியிலிருந்து மீட்பதை நோக்கமாகக் கொண்ட அனைத்து கடன் வழங்கும் நாடுகளுக்கிடையில் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு ரோக்கியோ தயாராக உள்ளது.

எனினும் அதில் இலங்கையின் முன்னணி கடன் வழங்குனரான சீனா இணையுமா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

அத்துடன் இலங்கையின் நிதி பற்றிய தெளிவின்மை இன்னும் உள்ளதாக ரொய்ட்டர் தெரிவித்துள்ளது.

2020 ஆம் ஆண்டின் இறுதியில் இருதரப்பு அடிப்படையில் இலங்கையின் கடன் 6.2 பில்லியன் டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இதனை தீர்ப்பதற்கான செயல்முறையை விரைவுபடுத்தும் பட்சத்தில் சீனாவுடனான அத்தகைய சந்திப்புக்கு ஜப்பான் தலைமை தாங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே கடன்களை மறுசீரமைப்பது தொடர்பான பேச்சுவார்த்தைக்கு பிரதான கடன் வழங்கும் நாடுகளை அழைக்குமாறு ஜப்பானை இலங்கை கோரும் என்று இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

படுகொலை செய்யப்பட்ட முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேயின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ளும் போது அடுத்த மாதம் ரோக்கியோவில் பிரதமர் புமியோ கிஷிடாவுடன் இந்த விவகாரம் குறித்து விவாதிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்தநிலையில் ஜப்பானிய தரப்புக்களின் இந்த முயற்சி தொடர்பில் ஜப்பானிய வெளியுறவு அமைச்சகம் கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டது. (அ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.08.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்




6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து




7.15 மணி : கதைவழி அறமொழி
07.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -மறு ஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்
1.30 மணி : WEEK END MOVIE - கோயமுத்தூர் மாப்பிளை
04.30 மணி : மனிதனின் மறுபக்கம்
05.00 மணி : அந்தி மந்தாரை - நேரலை
6.00 மணி : எதுசரி எதுபிழை

**இரவு**
07.00 மணி : நமக்காக நாம் வீட்டுத்தோட்டம்



07.30 மணி: டான் சினி மரதன் குறும்பட போட்டி நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி: டான் பட்டிமன்றம் - இலக்கியங்கள்



10.00 மணி : நெற்றிக்கண்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகக்கோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்களும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு